Registered as a Newspaper in Ceylon ★ விலை 10 சதம்

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (14-12-65) இதழ் 305

விசுவாவசு கார்த்திகை 29 ஷஃபான் பிறை 20 செவ்வாய்க்கிழமை

## சைவமும் தமிழும் ஒன்றுகலந்தவை

## நாவலர் விழாவுக்கு அமைச்சர் செய்தி

யாழ்ப்பாணம், செவ்.

''நாவலர் தமிழை வளர்த்தார், அதன் மூலம் சைவத்தைப் பரப்பினார். சைவத்தை வளர்த்தார், அதன் மூலம் தமிழைப் பரப்பினார். சைவமும் தமிழும் இரண்டறக் கலந்தவை என்ற உண்மையை உணர்த்தினார்.'' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அரசாங்க ஊழியர் நாளை நாவலருக்கு விழா எடுப்பதையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழ் மொழி வரலாற்றிலேயேஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் நாவலர். கவிதை நடைமூலம் வழங்கி வந்த தமிழை எளிய உரைநடையில் யாவரும் படித்து இன்புற வழிகாட்டியவர் நாவலர். உரைநடைமூலமே விஞ்ஞானக் கருத்துக்களை விளக்கமுடியும் என்பது மொழியாராச்சியாளர் கருத்து. எனவே தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களும் என்றே

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் சட்டவிதிகளுக்கு அங்கீகாரம்

## அரசாங்கக் கட்சிகள் அளித்துவிட்டன

### இர் மாதத்துக்குள் நிறைவேறுமென அமைச்சர் திருச்செல்வம் தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்க வகை செய்யும் சட்ட விதிகளை தேசிய அரசாங்கத்தின் சகல கட்சித் தலைவர்களும் அங்கீகரித்துவிட்டனர் என்ற தகவலை ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வம் 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த விசேட பேட்டியின் போது தெரிவித்தார்.**

தமிழை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக்கும் வகையில் சட்ட விதிகள் தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும், அண்மையில் பிரதமர் கூட்டிய தேசிய அரசாங்கத் தலைவர்கள் மகாநாட்டில் அந்த சட்ட விதிகளை அரசாங்கத்தின் சகல கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சிஅங்கத்தவர்களும் ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களும் சேர்ந்து மேற்கூறப்பட்ட சட்டவிதிகளை இயற்றினர் எனவும் இந்த மசோதா விரைவில். அனேகமாக இம்மாத இறுதிக்குள் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

### வல்வை பட்டின சபை விவகாரம்

வல்வெட்டித்துறைப் பட்டினசபையின் அந்தஸ்தை நகரசபைக்கு உயர்த்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வட்டாரங்களைப் பிரிப்பதற்கு ஸ்தலஸ்தாபனக் கமிஷனருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் உடனடியாக அந்தஸ்தை உயர்த்தும் அதிகாரம் தமக்கு இல்லையென்றும், குறிப்பிட்ட திகதியில் வல்வைப்பட்டினசபைத்தேர்தல் நடைபெறும் எனவும் புதிய வட்டாரங்கள்பிரித்து முடிந்தபின் நகரசபைக்கான புதிய தேர்தல் நடைபெறும் எனவும் அவர்தெரிவித்தார்.

# 74மாணவர்களும் 45பொலிஸாரும் காயமடைந்தனர்

## பல்கலைக்கழக சம்பவம்

### பொலிஸ் அறிக்கைதரும் விபரம்

கண்டி, திங்கள்

**பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவங்களில் 45 பொலிஸாரும் 74 மாணவர்களும் காயமடைந்தனர் என்று பொலிஸாரின் அறிக்கையொன்று கூறுகிறது. பேராதனை சம்பவம் காரணமாக பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.**

''பேராதனை பல்கலைக் கழக மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே நிகழ்ந்த கைகலப்புகள் குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான செய்திபத்திரிகைகளில் சரியான விபரங்கள் தெரிவிக்கப்படாததால் உண்மையான நிலையை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாக இப்பொழுது இந்தஅறிக்கையை பொலிஸ் பகுதியினர் வெளியிடுகின்றனர்.

### மாணவர்பற்றி புகார்

பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு இயக்கம் மோசமடைந்து வருகிறதென்றும் இதனால் அமைதிக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுவருகிறதென்றும் பேராதனை பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் ரி. டபிள்யு. விக்கிரமநாயகா 11ம் திகதி கண்டி பொலிஸாருக்கு டெலிபோன்மூலம் அறிவித்தார்

### பொலிஸார் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து மத்திய மாகாண பொலிஸ் சுப்பிரின்டனும் மேலும் இரண்டு உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் மார்களும் மூன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் பேராதனை பல்கலைக்கழக வளவுக்குள் விரைந்தனர்.

### 600 மாணவர்

அங்கு சென்று பார்த்த பொழுது அறுநூறு மாணவர்கள் ஆத்திரமாக நின்றுகொண்டிருந்தனர். இம்மாணவர்கள், பொலிஸ் அதிகாரிகளை விரிவுரையாளர் மண்டபத்துக்கு உள்ளே செல்லவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து, பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் விக்ரமநாயக்காவும் உதவிப் பேராசிரியர் ராஜரத்னவும் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் ஜயதிலகாவும் மாணவர்களைக் கலைந்து செல்லுமாறும் அமைதிக்கு பங்கம் ஏற்படாமல் பாதுகாக்குமாறும் கோரினர். ஆனால் மாணவர்கள் இதனை மறுத்துவிட்டதுடன் ஆத்திரம் மிகுந்து காணப்பட்டார்கள். இதன் பின்னர், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அதிகமான பொலிஸாரை கொண்டுவருவதற்காக பேராதனை பொலிஸ் நிலையத்திற்கு திரும்பி சென்றனர்.

### ஆபத்து பற்றி மீண்டும் புகார்

சில நிமிடங்களுக்குப்பின்னர் பேராசிரியர் குலரத்ன [illegible] பேராசிரியர் விக்கிரமநாயக்காவும் பேராதனை பொலிஸ் நிலையத்துக்கு டெலிபோன் மூலம் தொடர்புகொண்டனர்.

மாணவர்கள் மிகுந்த ஆத்திரம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும் மாணவர்கள் தாக்குதல்கள் நடத்தக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர்கள் டெலிபோன் மூலமாகத் தெரிவித்தனர்.

### பொலிஸ்படை விரைந்தது

பேராதனை பல்கலைக் கழகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டும் பொருட்டும் பல்கலைக் கழக உத்தியோகஸ்தர்களுக்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாகவும் ஒரு பொலிஸ்படையுடன் கண்டி பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்தஇரண்டுஉதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன் மார்கள் பேராதனை பல்கலைக்கழக வளவுக்குள் பிரவேசித்தனர்.

### கற்களால் தாக்கினர்

அப்பொழுது வேலைநிறுத்தம் செய்துகொண்டிருந்த மாணவர்கள் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கற்களால் தாக்கினர். முதலில் அறுநூறு மாணவர்கள் அங்கிருந்தபொழுதிலும் இப்பொழுது இரண்டாயிரம் மாணவர்கள்சூழ்ந்துகொண்டிருந்தனர். இம்மாணவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களை கற்களால் வீசித் தாக்கியது மட்டுமின்றி பல்கலைக்கழகக் கட்டடத்தையும் ஆய்வுகூடத்தையும் கற்களால் தாக்கத் தொடங்கினர்.

### கண்ணீர்ப்புகை பிரயோகம்

ஆத்திரம் கொண்டமாணவர்களைக் கலைந்துசெல்லுமாறும் இந்தவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீண்டும்கேட்டுக்கொண்ட போதிலும் மாணவர்கள் அதற்கு செவிசாய்ப்பதாகத்தெரியவில்லை. மீண்டும் பொலிசார் அழைக்கப்பட்டனர். முதலில் எச்சரிக்கை செய்யப்பட்டு அதற்கு மாணவர்கள் இணங்காததால் கண்ணீர்ப்புகையை பொலிசார் பிரயோகித்தனர். அதனைத் தொடர்ந்து பொலிசார் குறுந்தடிப் பிரயோகம் செய்தனர்.

## காங்கேசன்துறை, பலாலி, கோண்டாவிலுக்கு மந்திரி விஜயம்

காங்கேசன்துறை, ஞாயிறு

இன்று காலை காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு வந்த போக்குவரத்து மந்திரி ஹூல்லையைபுகையிரதநிலைய அதிகாரி வரவேற்றார். தொழிலாளர்கள்தெரிவித்த பல குறைகளுக்கு மந்திரி பதிலளிக்கையில், அடுத்த மாத முடிவிற்குள் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அதன்பின் மந்திரி பலாலி விமான நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டார். விமானநிலையத்தில் மந்திரியை உதவிஅதிபர் திரு. கனகசபை மாலைபோட்டு வரவேற்றார். விமானநிலையத்தில் கடமையாற்றும் தொழிலாளர்கள் மந்திரிக்கு தங்களது குறைகளைத் தெரிவித்தனர்.

மந்திரி விமான நிலையத்திலிருந்துகோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு விஜயம் செய்தனர் அங்கு டாக்டர் இ.எம்.வி. நாகநாதன் மந்திரியை வரவேற்றார். வரவேற்பில் மந்திரி பேசுகையில்; ''ஒன்பது வருடங்களாக முன் இருந்த அரசாங்கம் மக்களை பிழையான வழிக்குஇழத்துச் சென்றுள்ளது. தேசிய ஒற்றுமைக்கு பங்கம் விளைவித்தது பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்டது; வகுப்புவாதக் கலவரத்தை தூண்டிவிட்டது. தற்பொழுது தேசிய அரசாங்கம் மக்களை முன்னேற்றப் பாதைக்கு இழுத்துச் செல்கிறது'' என்று குறிப்பிட்டார். டாக்டர் நாகநாதன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## பொலிசாரை வாபஸ்பெற கோரிக்கை

பம்பலப்பிட்டி, திங்கள்

பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அசம்பாவிதம்பற்றி பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்துமாறு அகிலஇலங்கை மாணவர் சம்மேளனம் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்தியில் கோரியுள்ளது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்து வன்மையான கண்டனம் தெரிவிக்கும் அந்தத் தந்தியில் பல்கலைக்கழக 'ஹம்பஸ்' லிருந்து பொலிசாரை லாபஸ் பெறுமாறும் மாணவர்களின் கோரிக்கைகளை வழங்குமாறும்காயமுற்றவர்களுக்கு நஷ்டஈடுவழங்கவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

## மரணப்பிடியில் சொமர்ஸட்மோம்

லண்டன், டிச. 12

உலகப் புகழ்பெற்ற நூலாசிரியர் சொமர்ஸட்மோம் பிரெஞ்சு ரிவீராவிலுள்ள ஆஸ்பத்திரியில் மரணப்பிடியில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அவரின்வயது 91. அவரது சொந்த டாக்டரும் மற்றும் பல வைத்திய நிபுணர்களும் அவருக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள். திரு. மோம் இன்னும் பிரக்ஞையற்ற நிலையில் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

22 வயதுக்குட்பட்ட சயிக்கிள் ஓடத் தெரிந்த ஒருவர் தேவை. வங்கியில் ரூபாய் கட்டக்கூடிய அனுபவம் உள்ளவர் விரும்பத் தக்கது. பிணைப்பணம் ரூபா 500/- கட்டக்கூடியவர் விண்ணப்பிக்கவும். சன்லையிட் டையேஸ் அன் றைக்கிளீன், ராணி தியேட்டருக்கு அருகாமையில், பெரியகடை, யாழ்ப்பாணம். 1481

### மனேச்சர் தேவை

25 வயதுக்கு மேற்பட்டவராயும் S. S. C. சித்தியடைந்தவராயும் இருத்தல் வேண்டும். முன் அனுபவமும் கூட்டுறவுப் பயிற்சியும் விசேஷ தராதரமாய் கருதப்படும். பிணை ரூபா 1000/- சம்பளம் ரூபா 75/-க்கும் ரூபா 125/-க்கு மிடையில் தராதரத்துக்கு ஏற்ற முறையில் வழங்கப்படும். விண்ணப்பங்கள் காரியதரிசி, பரந்தன், இரசாயன ஊழியர் கூட்டுறவு நன்னேக்குச் சங்கம், இரசாயனத் தொழிற்சாலை, பரந்தன் என்று விலாசமிட்டு 31-12-65க்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ச. அந்தோனிப்பிள்ளை, தலைவர். 1482

### விற்பனைக்கு

இராசாவின் தோட்டம் ரோட்டில் வீடுகட்டுவதற்கு உகந்த காணி 7 பரப்பு துண்டாயும் அல்லது 2 பரப்புக் கொண்ட துண்டுகளாயும் விற்பனைக்கு இருக்கின்றது. விண்ணப்பிக்கவும்:- சிவசுப்பிரமணியம், 18/3, பெர்ணண்டோரோட், கொழும்பு-6, (Fernando Road, Colombo-6. 1478

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### காணவில்லை

சுண்டிக்குளிக்கும் நல்லூருக்கும் இடையில் பவுண் சங்கிலியுடன் கூடிய பெண்கள் கைக்கடிகாரம் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கு. நேசையா, 6, சோமசுந்தரம் வழி, சுண்டிக்குளி என்ற விலாசதாரரிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1483





## கொழும்பு

### செவ்வாய் 14 - 12 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 இசைச்சித்திரம் — நாவலர், 7-30 மெல்லிசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பேச்சு — ஆறுமுகநாவலர், 7-00 வயலின் — கே. பாக்கியராசா, 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-40 நாதஸ்வரம் — வி. கோதண்டபாணி.

# தேசீய வீரர் நாவலர்

— வெ. சு. நடராசா —

**நம்** நாடு கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக அந்நிய ஆதிக்கங்களினால் தன் நிலைமை இழந்து, சீர்குலைந்து, சிறப்புக்குன்றிநின்றது. நாடு சீர்குலைய ஓர் இனத்தின் ஆணிவேர் ஆட்டங் கண்டுவிடுகிறது. அந்தக் காலத்தில் அவதாரபுருடர்களின், பெரியோர்களின், தீர்க்கதரிசிகளின், மகான்களின் தேவையும் சேவையும் அவசியமாகின்றது. இப்படியான தவப்புதல்வர்கள் நாட்டில் தோன்றி வேண்டிய வழிவகைகளைச் செய்கின்றனர்.



### தேவையின் அவசியம்

பாழ்பட்டு நின்றதோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த விவேகானந்தர், திலகர், மகாத்மா காந்தியடிகள் போன்ற பெருமக்களின் தேவை அவசியமாகவிருந்தது. அந்த நாட்டில் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த அநேக உத்தமர்கள் தோன்றியது போல இந்த ஈழநாட்டிலும் சில மகான்கள் தோன்றியிருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. தெற்கே அனகாரிகதர்மபாலா தோன்றி அளப்பரிய தேசியத் தொண்டுகளைச் செய்ததாகச் சிங்கள மக்கள் போற்றிப் புகழ்கிறார்கள். கிழக்கே விபுலானந்த அடிகள் தோன்றித்தொண்டாற்றினார். வடக்கே நமதுயாழ்ப்பாணத்திற் தோன்றிய புண்ணிய புருடர்களில் நமது தேசிய வீரன் ஆறுமுகநாவலர் முதன்மையானவர் தலைசிறந்தவரென்றால் புகழ்ப் பேச்சல்ல. ஈழநாடு அந்நிய மதகுருமார்களின் அட்டகாசத்தால் தலைகுனிந்து, கையேந்தி, சுயமதிப்பிழந்து பாழ்பட்டு உறங்கிக்கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் மக்களை உற்சாகமூட்டித் தட்டியெழுப்பி 'தமிழன் என்றோர்இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு, அமிழ்தம் அவனது மொழியாகும், அன்பே (சிவமே) அவனது வழி (மார்க்கம்) யாகும்' என்பதற்கிணங்கத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்ய ஒரு வழிகாட்டியின் தேவை அத்தியாவசியமாகின்றது.

### ஓர் எடுத்துக்காட்டு

நாவலர் சாதித்த காரியங்கள் அத்தனையும் எக்காலத்துக்கும் பொருத்தமுடையனவாக இருக்கின்றன. அவர் தனது வாழ்வையே தியாகம் செய்ததுபோல் இந்த நாட்டில் வேறுயாரும் செய்திருக்கமாட்டார்கள். அன்னார் ஆற்றிய தொண்டுகள் எந்நாட்டவரும், எக்காலத்தவரும் போற்றத் தகுந்த முறையில் பிரதிபலிக்கின்றது. எனவே இவர் வாழ்க்கை வரலாறு இந்நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். இவருடைய தொண்டுகள் இக்கால மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும்.

### நல்லூரும் நாவலர் தோற்றமும்

நல்லவர்கள், 'நா' வல்லவர்கள், பெரியோர்கள் தீர்க்கதரிசிகள் நல்ல ஊர்களிலேயே அவதரிப்பது இயல்பு. ஒரு நாட்டின் பெருமை அதனை ஆளும் அரசிடத்தும் இல்லை. ஆட்டிவைக்கும் அரசியல்வாதிகளிடமும் இல்லை. நாட்டின் வற்றாத நதிகளும் குன்றாத சுரங்கங்களும் பெருமையைத்தரா. மாடமாளிகைகள் கூடகோபுரங்களும்சிறப்பை எடுத்தியம்பமாட்டா. அந்நாட்டின்பெருமை செழுமை உயர்வு எல்லாம் அந்நாட்டிலேயே அவதரிக்கும் மகான்களையே பொறுத்திருக்கின்றது. எந்த ஊரிலே தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உத்தமர்கள் உதிக்கின்றார்களோ, எந்த ஊரில் பழப் பெருமையை நிலைநிறுத்தக்கூடியமக்களின் மனதைக் கவரக்கூடிய விவேகிகள் உதயமாகின்றார்களோ அந்த ஊர்தான் பெருமை கொள்ளத்தக்க ஊர்; அந்த ஊர்தான் நல்ல ஊர்—நல்லூர்.

ஈழநாட்டுமக்கள் தம்மதத்தைமறந்துமொழியை புறக்கணித்துத்தேசியப்பற்றைத் துறந்திருந்த காலத்தில் தான் நல்லூரில் 18-12-1822-ல் அவதரித்தார் நம் பெரியார்.

### பள்ளிப் படிப்பும் விவேகத்திறனும்

சிறு வயதிலேயே பல அரிய பெரிய நூல்களையெல்லாம் மகாவித்துவான் சேனாதிராயர், சரவணமுத்துப் புலவர் முதலியோரிடம் கற்றுத்தெளிந்த ஆறுமுகனார் பீற்றர் பேர்சினால் பாதிரியார் பாடசாலையில் ஆங்கிலம் பயின்றார். இப்பாடசாலையே இக்காலத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்று சொல்லப்படுகிறது. இவரது 9-ம் வயதிலே தந்தையார் விட்டுச் சென்ற இரத்தினம் [illegible] [illegible]த்தி செய்தனரென்றால் அன்னாரின் விவேகத்தின் வேகம் தான் என்னே!

### கிறீஸ்து மதத்திற்குத் தொண்டுசெய்த சைவர்

நம்நாட்டு மக்களில் அநேகர் நாவலரை நன்றாக இன்னும் அறிந்துகொள்ளவில்லை நாவலர் மீது தவறான கருத்துக்களே கொண்டிருக்கின்றனர். நாவலர் மதப்பற்று மிகுந்த தீவிரவாதி என்ற அபிப்பிராயம் நிலவிவருகிறது. நாவலரும் ஸ்ரீராமகிருஷ்ணர், காந்தியடிகள், இராமலிங்க சுவாமிகள் போன்ற சமரசவாதியே. புனித மதங்களில் இவர்கள் குறை குற்றம் காணவில்லை. ஆனால் அந்த மதங்களைப் பரப்பக் கையாண்ட, பரப்புவோரின் விபரீத நடத்தைகளில் தான் சீற்றம் கொண்டார்கள். நமது நாவலர் இந்து மதத்தை நிந்தித்துத் தம் மதத்தைப் பரப்ப முற்படுவோரைத் தகுந்த ஆதாரம் காட்டித் தடுத்தார். மதமாற்றத்திற்குத் தூண்டுகோலாக இருந்தவர்களுக்குத் சொல்லம்புகளாலும் செயலாலும் நல்ல சவுக்கடி கொடுத்தார். மகாத்மா காந்தியடிகளே இந்த மதமாற்றம் செய்வோரையும் கையாளும் முறைகளையும் பலவிடங்களில் கண்டித்திருக்கிறார். இது ஒருபுறமிருக்க நமது நாவலருக்கு ஆங்கில மொழியைப் புகட்டிய பாதிரியார் பேர்சிவல் விளிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்க்கத் தகுந்தவர் இவரே எனக் கண்டு வேண்டினார். இதற்கிசைந்து தமிழ் மொழியில் முதன் முதலாக பைபிளைத் திறம்பட மொழிபெயர்த்துக்கொடுத்த பெருமை நாவலருக்கே உரியது. மதப்பற்றில் மிகுந்த தீவிர கொள்கையுடையவரென்றால் இந்த மொழி பெயர்ப்புக்கு இசைந்திருப்பாரா நாவலரவர்கள்என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனாலேயே கிறீஸ்த மதத்திற்கும் ஒரு வகையில் தொண்டு செய்தவராகின்றார் நாவலரவர்கள்

### சுயஉணர்ச்சியும் தேசீயப் பற்றும்

அன்னியமதப் பாதிரிமார்களின் ஆதிக்கம் மக்களைப் பல கோணங்களிலிருந்து தாக்கியபோது, தமிழ் மொழியையும் மதத்தையும் அழிக்கமுயன்றபோது அந்தக்காலத்தில் அடிபணியாது எதிர்ப்புக் கொடுத்து தமிழ் மொழியைப் பாதுகாத்துத்தந்த பெருமகன் நாவலர். அன்று அவர் தன்னந்தனியே சாதித்த காரியங்களை இன்று எந்த ஸ்தாபனங்களும் சாதிக்கமுடியாத இந்த நாட்டிலே, தமிழுக்குத் தொண்டாற்றிவர் பலர் இருக்கலாம். ஆனால் நாவலரவர்களே முதன்முதலாக இந்த நாட்டில் "தன் கடன் தமிழ்ப் பணிபுரிவதே" என்று தொண்டாற்றியவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. நாவலர் செய்த அரும்பெரும் சேவைகளையெல்லாம் நாவலர் காலக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தால் தான் நன்கு புலப்படும். தமது பிறந்த மதம், தாய்மொழி, தேசியத் தொண்டு ஆகிய அனைத்துக்கும் தன்னையே தியாகம்செய்த அவதார புருடர் இந்நாட்டில் உண்டென்றால் அப்பெருந்தகை நாவலரே. அக்காலப் பாதிரிமார்கள் விபரீத முறையில் மொழியையும் மதத்தையும் தாக்கல் செய்வதைக் கண்ட நாவலருக்குச் சுயஉணர்ச்சி, தாய்மொழிப்பற்று, தேசிய சேவை ஆகிய அனைத்தும் தளிர்விட்டுத் தளைக்கத் தொடங்கின.

பள்ளி ஆசிரியராகப் பணியாற்றும் போது மதத்தின் பேரால் நாடும் மொழியும் எவ்வாறு சுரண்டப் படுகிறதென்பதை நன்கு அறிந்து கொண்டார் நாவலரவர்கள். அந்நியர் ஆதிக்கம் அளவுக்கு மீறிவிடவே இவர் தமது வேலையை உதறித்தள்ளினார்.

### பலவித சேவைகள்

தேசீயப்பாடசாலைகள்நிறுவுவது, தேசீயப் பத்திரிகைகள் நடத்துவதற்கு அடிகோலி வைப்பது, இனிய தமிழ் நூல்களை வெளியிடுவது. செய்யுள் நூல்களை வசனநூல்களாக்குவது, பிரசங்கம் செய்வது ஆகிய பல பணிகளைத்தாமே மேற்கொண்டார். தாமே அரும்பாடுபட்டு நைட்டிகப் பிரம்மச்சாரி விரதம் பூண்டு பெரும் பணியாற்ற முற்பட்டார். யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அச்சகங்களை நிறுவி நூல்கள்பல வெளியிட்டார். தமிழ் வசனநடையிலே ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ணினார். எனவே அறிஞர் வீ.கோ. சூரியநாராயணசாஸ்திரிகளால் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் பாராட்டப்பட்டார். நமது சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிலேயே பயில வேண்டுமென்று விரும்பினார். உழைத்தார். இந்த நாட்டிலே கொழும்பு நகரம் உட்படப் பலவிடங்களிலும் சங்கங்கள், சபைகள் தோன்றித் தேசிய இந்துக்கல்லூரிகள் நிறுவத் தூண்டுகோலாக இருந்ததும் நாவலரே. 'இந்துசாதனம்' 'சிவதொண்டன்' முதலியசைவப் பத்திரிகைகள் தோன்றுவதற்கு மூல கர்த்தா நாவலரவர்களே. தமது சொந்தமுயற்சியாலே யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் இரு கலாசாலைகளை நிறுவினார். நாவலர் வசனநடைக்கும் பாலபாடங்களுக்கும் ஒருதனிமதிப்பு இருப்பது வெள்ளிடைமலை.

### மேலும்பலபணிகள்

நமதுசைவ ஆலயங்கள் சீர்பெற நடைபெறஅரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்றுஅக்காலத்திலேதுணிவுடன் கூறியும் உழைத்தும் வந்த பெரியார் நாவலரே. திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும், நகுலேஸ்வரமும் ஈழத் தமிழ் நாட்டின் தனிப்பெரும் தேசீயச் சொத்துக்கள்என எடுத்துக்காட்டினார். எனவே இவை

(7-ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'யுத்தமா? தயார்!'

## அமெரிக்காவுக்கு சீனு எச்சரிக்கை

பீகிங், டிச. 13

சீனுமீது அமெரிக்கா யுத்தம் தொடுத்தால் அதனை வெற்றியுடன் சமாளிக்க சீனு தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''பீகிங் மக்கள் தினசரி'' வெளியிட்டுள்ள செய்தியில் ''யுத்தமா? தயார்'' என்று அமெரிக்காவை எச்சரிக்கை செய்துள்ளது.

''அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை சீன மக்கள் மிகுந்த பொறுமையுடன் சகித்துக்கொண்டிருக்கின்றுர்கள். சீன மக்களின் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என்பதை சீன மக்கள்ஒவ்வொரு நிமிடமும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறுர்கள். அக்கட்டத்தை வெற்றியுடன் நாம் சமாளிப்போம்'' என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பி டி ஸி

# "சீனரை அடக்குவதை உடன் நிறுத்துக"

## இந்தோனேஷியாவுக்கு எச்சரிக்கை

பீகிங், டிச. 13

இந்தோனேஷியாவின் பல பகுதிகளிலும் சீனர்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறுர்கள் என்று சீனு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தோனேஷியாவுக்கு சீனு அனுப்பிய ஆட்சேபக் குறிப்பொன்றில் இந்தோனேஷியாவின் பல்வேறு பகுதிகளிலும் சீனர்கள் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறுர்கள் என்றும் இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிடுமாறும் கோரியுள்ளது. பல நிறுவனங்களிலும் சீனத்தலைவர்களின் படங்கள் கிழித்தெறியப்பட்டிருக்கின்றன. சீன சார்பான பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. செய்திகளைக் கேட்பதற்கும் அங்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை நீக்க வேண்டும்'' என்று சீனு தனது ஆட்சேபக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

# "இனவெறி பரவுவதை உடன் தடைசெய்க"

## பிரிட்டனுக்கு கென்யா கோரிக்கை

நியுயோர்க், டிச. 13

கென்யா அதிபர்ஜோமோ கென்யாட்டாவின் கோரிக்கையைத்தொடர்ந்துரொடீஷியா விவகாரம் குறித்து விவாதிக்கும்பொருட்டு ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை இன்றிரவு கூடுகிறது.

இதற்கிடையே ரொடீஷியா நெருக்கடி குறித்து கென்யா அதிபர்விடுத்துள்ள செய்தியில்; இனவெறி உலகெங்கும் பரவுகிறது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''ரொடீஷியாமீது பிரிட்டன் தனது தடை நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டும் ஆனுல் இதற்காக பிரிட்டனுடன் ராஜீயத்தொடர்புகளை முறித்துக்கொள்வதில் பலனிருக்காது. ரொடீஷியா புதிய இனவெறியைத் தூண்டிவிட்டிருக்கிறது. இந்த இனவெறியை பரவவிடாமல் செய்ய பிரிட்டன் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்'' என்றும் தமது செய்தியில் ஜோமோ கென்யாட்டா கேட்டுள்ளார்.

# உற்பத்திகூட்டு; மட்டாகஉண்ணு; எதையும் வீணுக்காதே

## சாஸ்திரியின் புதிய கோஷம்

புதுடில்லி, டிச. 13

''உற்பத்தியைப் பெருக்குங்கள்; மட்டமாக சாப்பிடுங்கள்; எதையும் வீணுக்காதீர்கள்'' என்று இந்திய மக்களை பிரதமர் சாஸ்திரி கேட்டுள்ளார்.

பிரதமர் சாஸ்திரி நேற்று விசாகபட்டினம் உட்பட மூன்று இடங்களில் பொதுக் கூட்டங்களில் உரை நிகழ்த்தினுர்.

பாகிஸ்தானுடன் ஏற்பட்ட ''யுத்தம்'' பற்றி அவர் குறிப்பிடுகையில், பாகிஸ்தான் நம்முடன் நடத்திய சண்டையில் நாம் பெரும் வெற்றி ஈட்டியிருந்தாலும் இதுகுறித்து மெத்தனமாக நாம் இருந்திருக்கக்கூடாது என்று கூறினுர்.

''உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற வேண்டும். அதே நேரத்தில் நாட்டின் பாதுகாப்பையும் நாம்தளர்த்திவிடக்கூடாது. எப்பொழுதும் நம்மை ஆபத்து எதிர்நோக்கியுள்ளது. ஆகையினுல் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

''போர்க்காலத்தில் இந்திய ஜவான்கள் காட்டிய பெரும் தீரம் நாட்டின் மதிப்பை உயர்த்திவிட்டது. புதிய நம்பிக்கையை எமக்கு ஊட்டிவிட்டார்கள்'' என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினுர்.

### பொதுத் தேர்தல்

பெல்கிரேட், டிச. 13

பல்கேரிய பாராளுமன்ற தேர்தல்கள் இம்மாதம் 27-ம் தேதி நடைபெறும்.

பி டி ஸி

### வில்ஸன் கலந்து கொள்வார்?

லண்டன், டிச. 13

ரொடீஷியா நெருக்கடி சம்பந்தமான உத்தேச காமன்வெல்த் மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் கலந்துகொள்வார் எனத் தெரியவருகிறது. இம்மகாட்டைக் கூட்டுவதில் நைஜீரிய அதிபர் பெருமுயற்சி எடுத்துவருகின்றுர்.

நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் ஒரு மகாநாட்டில் இதுசம்பந்தமான முடிவு மேற்கொள்ளப்படலாம் எனத் தெரியவருகிறது.

(பி. டி. ஸி.)

### 5 இந்தியர் மாண்டனர்

கராச்சி, டிச. 13

லாகூர் முன்னணியில் இந்திய - பாகிஸ்தான் துருப்புகளிடையே ஏற்பட்ட மோதலில் 5 இந்திய துருப்புகள் பலியானுர்கள் என்று இங்கு அறிவிக்கப்பட்டது.

(பி. டி. ஸி.)

### 13 பேர் பலி

கோபோலோ, (பிரேஸில்) டிச. 13

கடுமையான வெப்பம் காரணமாக இங்கு 13 பேர் மாண்டனர். இவர்களில் அதிகமானவர்கள் குழந்தைகள். (பி. டி. ஸி.)

### தீவிபத்து: 12 பேர் பலி

சிக்காகோ, டிச. 13

இங்கு ஏற்பட்ட தீவிபத்தில் 12 பேர் கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த 20 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பி. டி. ஸி.)

### 13 பேர் கொலை

லிஸ்கன், டிச. 13

வடக்கு அங்கோலாவில் நடைபெற்றுவரும் சண்டையில் கடந்த எட்டு நாட்களில் 13 போர்ச்சுகீஸிய துருப்புக்கள் கொல்லப்பட்டனர். (பி. டி. ஸி.)

### 9 பேரை காணவில்லை

பம்பாய், டிச. 13

புயல் காரணமாக இங்கிருந்து 250 மைல் தூரத்திலுள்ள இரத்தின கிரியில் ஒரு படகிலிருந்த ஒன்பது பேர் காணுமற் போய் விட்டனர். பி. டி. ஸி.)

### வானெலியில் நாவலர் நினைவு

மாவிட்டபுரம், திங்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவுதினத்தை யொட்டி இலங்கை வானெலி தமிழ்ப் பிரிவு விசேஷ நிகழ்ச்சிகளை இவ்வாரம் முழுவதும் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நாவலர் தினமான இம் மாதம் 14-ம் திகதி பல விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடாகியுள்ளது. காலை 6 50 மணிக்கு நாவலர் வாசகமும், 7 மணி முதல் 7-15 மணிவரை சுவாமி விபுலானந்த அடிகள், நாவலர் பெருமான்மீது பாடிய பாமாலைகள் இன்னிசையுடனும் ஒலிபரப்பாகும். அன்றிரவு 7 மணிக்கு கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை நாவலர் பற்றிப் பேசுவார்.

18-ம் திகதி இரவு 6-45 மணிமுதல் வித்துவான் எவ். எக்ஸி. நடராசா 'நாவலர் உரை நடை' பற்றி உரை நிகழ்த்துவார்.

இவைதவிர, நாவலர்பெருமான் பணிகளுக்கு அஞ்சலி செய்யும் வகையில் சிறுவர் நிகழ்ச்சிகளை நடத்தவும் வானெலித் தமிழ்ப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

### 3 மூடை அரிசி!

கொடிகாமம், திங்கள்

கொடிகாமம் சந்தையில் நேற்று முன்தினம் மூன்று மூடை பச்சை அரிசியை கொடிகாமம் கிராமசேவகர் திரு. வி. அம்பலவாணர் கைப்பற்றினுர்.

சந்தையில் பச்சை அரிசி மூடைகள் இருப்பதாக தகவல் கிடைத்ததன் பேரில் [illegible] சென்று அம்மூடைகளின் சொந்தக்காரர் யாரென விஞவியபொழுது அம்மூடைகளின் சொந்தக்காரர் மறைந்துவிட்டார்களென்றும் கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து அம்மூன்று மூடைகளும் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# அமெரிக்க வீரர்களின் விண்வெளி யாத்திரை

## 191 மணிநேரத்தில் 120 சுற்றுகள்

ஹவுஸ்டன், (டாக்ஸஸ்)டிச. 13

தற்பொழுது வெளிவான மண்டலத்தில் ''ஜெமினி-7''-ல் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளிவீரர்களான போர்மனும், லொவலும் புதிய உலக சாதனையை நிலைநாட்டிவிட்டு தமது பயணத்தை தொடர்ந்து வருகின்றனர். இவர்களிருவரும் நேற்று நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை விண்வெளியில் 190 மணித்தியாலம் 56 நிமிடங்கள்வரை பிரயாணம் செய்து 120 தடவைகள் பூமியை வலம் வந்து விட்டனர்.

இரு வீரர்களும் நல்ல சுகத்துடன் இருப்பதாக ஹவுஸ்டனிலுள்ள கட்டுப்பாட்டதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே நேற்று விண்வெளிக்கு அனுப்பப்படவிருந்த ''ஜெமினி-6'' வான்வெளிக் கப்பல் சில இயந்திரக் கோளாறுகள் காரணமாக அனுப்பப்படவில்லை. இக்கப்பலில் இரு விண்வெளிப் பிரயாணிகள் பயணம் செய்வதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ''ஜெமினி-6'' வானவெளிக் கப்பல் வியாழக்கிழமை விண்வெளிக்கு அனுப்பப்படும் என்றும், திட்டமிட்டபடி இக்கப்பல் ''ஜெமினி-7'' சந்திக்குமென்றும் இன்று அறிவிக்கப்பட்டது.


# இந்திய - பாகிஸ்தான் நெருக்கடி

## அயூப் - வில்ஸன் கருத்து வேறுபாடு

லண்டன், டிச. 13

கம்யூனிஸ்ட் சீனு சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தான் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கானுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் ஹரோல்ட் வில்ஸனுக்குமிடையே கருத்து வேற்றுமை நிலவியதாக இங்கு கூறப்படுகிறது. இதேமாதிரி இந்திய-பாகிஸ்தான் நெருக்கடிகள் குறித்தும் இருதலைவர்களுக்குமிடையே சிறிதளவு தப்பபிப்பிராயம் நிலவியதாகவும் சொல்லப்படுகிறது.





டாஷ்கண்டில் நடைபெறவிருக்கும் அயூப் - சாஸ்திரி பேச்சுவார்த்தைகள் குறிந்து பிரிட்டிஷ் பிரதமர் வில்ஸன் கருத்து வெளியிடுகையில்; இந்தப் பேச்சுக்கள் வெற்றிபெற உழைக்குமாறும் சமாதான நோக்குடன் பேச்சுக்களை அணுகுமாறும் அதிபர் அயூப்கானுக்கு கூறியதாகக் கூறப்படுகிறது.

### நியூயோர்க்கில்

லண்டன் சென்றிருந்த பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் நேற்றிரவு நியுயோர்க் வந்து சேர்ந்தார். இன்று அவர் ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டை சந்திப்பார்.

நாளையும் மறுதினமும் அமெரிக்க அதிபர் ஜோன்ஸனை அதிபர் அயூப்கான் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவார்.

### உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள்

கொழும்பு, திங்கள்

எட்டியாந்தோட்டை பட்டின சபைத்தேர்தலில் யு. என். பி. நான்கு ஸ்தானங்களையும். லங்கா சமசமாஜக் கட்சி ஒரு ஸ்தானத்தையும் பெற்றது. கோட்டே நகர சபைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு நான்கு ஸ்தானங்களும் யு. என். பிக்கு மூன்று ஸ்தானங்களும், கம்யூனிஸ்ட்கட்சிக்கு ஒரு ஸ்தானமும் கிடைத்தன. இரண்டு சுயேச்சை அபேட்சகர்களும் வெற்றி பெற்றனர். கடுகணுவை நகர சபைத் தேர்தலில் யு. என். பி. ஐந்து ஸ்தானங்களைப் பெற்றது. மற்றுமொருஸ்தானம் சுயேச்சைக்குக்கிடைத்தது ஹோமகம பட்டின சபைத் தேர்தலில் ஐந்து ஸ்தானங்கள் ஐக்கிய முன்னணிக்கும் இரண்டு ஸ்தானங்கள் யு. என். பி.க்கும் கிடைத்தன.

### 'ஒரே பாடசாலையில் 40 ஆண்டு சேவை'

மீசாலை, திங்கள்

மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலையில் தொடர்ந்து 40 ஆண்டுகள் கடமையாற்றிய திரு. மு. சின்னத்தம்பி, இம்மாதத்துடன் ஓய்வு பெறுவதைமுன்னிட்டு பாடசாலையில் ஒரு பிரிவுபசார விருந்து நடைபெற்றது.

வட்டார வித்தியாதரிசிகர் திரு. வி. கனகசபாபதி பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு, தலைமையாசிரியரின் நீண்டகாலசேவையைப் பாராட்டினுர். காரியதரிசி திரு. கு. சங்கரப்பிள்ளை நன்றி கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒவ்வொருவரிடமும் உள்ள நன்மையைப் பார்க்க முயலுக. குற்றங்களைக் கூறும் இயல்பை வளர்க்க வேண்டாம். சத்சங்கம், நல்ல நூல்களைப் படித்தல் இவைமூலம் இந்தத் தன்மையைப் பெறலாம்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 387

ஈழ்ப்பாணம்விசுவாவசுஆண்டு கார்த்திகை மீ 29 உ (14-12-65)


## காமன் வெல்த் மகாநாடு

ரொடீஷியாவில் சிறுபான்மையினரான வெள்ளையர் பெரும்பான்மையினரான ஆபிரிக்க மக்களின் உரிமைகளை மறுத்து ஒருதலைப்பட்சமாக 'சுதந்திரப் பிரகடனம்' செய்து 'புரட்சி' அரசாங்கம் அமைத்துள்ளதை எதிர்த்து அந்த அரசாங்கத்தை நசுக்குவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு அடுத்தமாத முற்பகுதியில் காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று நைஜீரியா தெரிவித்துள்ள யோசனையை காமன்வெல்த் தலைவர்கள் பரிசீலனை செய்வதாக ஒரு செய்தி கூறுகிறது. காமன்வெல்த் நாடுகளின் உச்சி மகாநாட்டுக்கான விரிவான திட்டங்களை நைஜீரியப் பிரதமர் லண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் பிரதமருடன் கலந்தாலோசிக்க விருப்பதாகவும் இதை பிரிட்டிஷ் பிரதமரும் வரவேற்பதாகவும் அதே செய்தி கூறுகிறது. ரொடீஷியா விவகாரத்தில் பிரிட்டன் பின்பற்றும்போக்கில் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பல அதிருப்தியும் அவநம்பிக்கையும் கொண்டுள்ளன. நைஜீரியப் பிரதமரின் இந்த யோசனையை செயலாக்குவதன்மூலம் காமன்வெல்த் நாடுகளிடையே நல்லுறவையும். நட்புறவையும் ஏற்படுத்துவதுடன் எதிர்கால ஐக்கியத்துக்கும் பிரிட்டன் வழிகாண முடியும்.

ரொடீஷியாவில் ஸ்மித் அரசாங்கம் செய்த புரட்சியை நசுக்க, அவசியமானல் பலாத்காரத்தையும் பிரிட்டன் உபயோகிக்க வேண்டுமென்று ஆசிய, ஆபிரிக்க நாடுகள் வற்புறுத்தி வந்தன. ரொடீஷிய புரட்சி அரசாங்கத்துக்கெதிராக பிரிட்டன் பொருளாதார, அரசியல் தடை நடவடிக்கைகளை எடுத்துள்ளதெனினும் அது பலநாடுகளுக்குத் திருப்தியளிக்கவில்லை. இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் ஸ்மித்தின் அரசாங்கத்தை நசுக்கவேண்டுமென்று சில ஆபிரிக்க நாடுகள் 'கெடு' விதித்துள்ளதுடன் இதற்குள் பிரிட்டன் தனது கடமையைச் செய்துமுடிக்கத் தவறினல் காமன்வெல்த்திலிருந்து விலகிவிடப் போவதாகவும் பிரிட்டனுடனுள்ள உறவுகளைத் துண்டித்துக் கொள்ளப் போவதாகவும் சில நாடுகள் எச்சரிக்கை செய்துள்ளன. இச்சமயத்தில் காமன்வெல்த் உச்சிமகாநாட்டைக் கூட்டவேண்டுமென நைஜீரியப்பிரதமர் தெரிவித்து அதற்கான திட்டங்களையும் வகுக்க முன்வந்துள்ளது காமன்வெல்த் குடும்பம் சிதையாமல் தடுப்பதற்கான ஒரு நல்ல முயற்சியாகும்.

உத்தேச காமன்வெல்த் உச்சிமகாநாடு ரொடீஷியப் பிரச்னையில் மட்டும் தீர்வுகாண்பதால் காமன்வெல்த் ஐக்கியம் வலுவடையுமென்றே அதனல் அதிக பயன் ஏற்பட்டுவிடுமென்றே திருப்தியடைய முடியாது. காமன்வெல்த் அமைக்கப்பட்டுஇதுவரை அதனல் விளைந்த நன்மைகள், பயன்கள் என்ன என்பதை ஆராயவேண்டியது அவசியம். ரொடீஷியாமட்டும்தான் காமன்வெல்த் நாடுகளுக்குள் உள்ள பிரச்னையா? இந்தியாவும் பாகிஸ்தானும் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கின்றன. என்றாலும் அவை இரண்டுக்குமுள்ள தகராறும் வேற்றுமையும் விரிவடைந்து யுத்தத்திலும் அவை ஈடுபட்டுள்ளன. இந்தியா—பாகிஸ்தான் தகராறுக்கு தீர்வு காணும் முயற்சி காமன்வெல்த்தில் அங்கம் வகிக்காத சோவியத் நாட்டில் நடைபெற விருக்கிறது. இந்தியா — பாகிஸ்தான் மட்டுமல்ல காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் இதர நாடுகளுக்கிடையிலும்கூட பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன.

ரொடீஷியாமட்டுமல்ல இதர பிரச்னைகளுக்கும் சுமுகமான தீர்வுகாணவும் காமன்வெல்த் குடும்பம் சிதையாமல் ஐக்கியத்தை பாதுகாக்கவும் காமன்வெல்த்துக்கு பொதுவான சில வழிமுறைகளைக்காண வேண்டியது அவசியம். இந்த வகையில் காமன்வெல்த் நாடுகளுக்கென ஒரேவிதமான (கரன்ஸி) நாணயப் புழக்கத்தையும் கட்டுப்பாடற்ற யாத்திரைவசதி, வர்த்தக உறவு ஆகியவைகளையும் ஏற்படுத்தவேண்டும். காமன்வெல்த் பார்லிமெண்ட், காமன்வெல்த் உயர்நீதிமன்றம் ஆகியவைகளை அமைப்பதும் காமன்வெல்த் சக்திவாய்ந்த ஓர் அமைப்பாக விளங்க உதவியாக இருக்கும். காமன்வெல்த் தலைமைகூட. நிரந்தரமாக பிரிட்டனிடம் இல்லாது அடிக்கடி மாற்றப்படவேண்டும் சரியான நிரந்தரமான கொள்கைத் திட்டங்களை உருவாக்காமல் திடீர்ப் பிரச்னைகளுக்கு மட்டும் அந்தந்தசமயத்தில் தீர்வு காண முயற்சிசெய்வது காமன்வெல்த் ஐக்கியத்தை வலுப்படுத்தாது.

## சிங்கப்பூரில் இந்திய தூதுக்குழு

சிங்கப்பூர், டிச. 12

ஆறுபேர் கொண்ட இந்தியபாராளுமன்ற நல்லெண்ணத் தூதுகோஷ்யொன்று நேற்று முன்தினம் இங்கு வந்து சேர்ந்தது. இக்கோஷ்டியினர் மூன்று நாள் வரை இங்கு தங்குவர்.

இத்தூதுக்குழுவின் தலைவர் திரு. டி. பி. கார்மரிக்கன் இந்திய-சிங்கப்பூர்வர்த்தகத் தொடர்புகளை அதிகரிக்கச் செய்வதுசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

மேற்படி குழுவினர் தாய்லாந்து, கப்போடியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்.

(பி. டி. ஐ.)

## நாவலர் வணக்கம்

-வித்துவான் க. வேந்தனர்-

ஈழமெனுந் திருநாட்டின் இசையுலகில் நிறைய
எஞ்ஞான்றும் தமிழன்னை இளமைநலங் கனிய
வாழையடி வாழையெனச் சைவநெறி மலர
வந்தருளும் நாவலரின் மலரடிகள் தொழுதோம்

திருநெறிய தீந்தமிழும் சிவநெறியும் ஒன்ருய்ச்
சேர்ந்தோங்கும் பண்ணையெனத் திகழ்நல்லூர்ப் பதியில்
வருமரியபெருங்குலத்தின்வழிமுதலாய்த்தோன்றும்
மாண்புநிறைநாவலரின் மலரடிகள் தொழுதோம

தென்னிலங்கை எனும்ஈழ நன்னட்டை முன்னாள்
திறனாரும் இராவணனார் அரசாளும் போதும
மன்னியது சைவநெறி என்னும்வர லாற்றை
வாழ்வுறச்செய் நாவலரின் வழியடியோம் நாங்கள்

ஈழமணித் திருநாட்டில் இயல்பாக நிலவும்
இனியதமிழ் மரபினுயர் தனியியல்பை எல்லாம்
வாழியவென் றேயேத்தித் தமிழகத்தார் போற்ற
வழங்கியருள் நாவலரின் வழியடியோம் நாங்கள்

தவம்பெருக்கும் தருமபுர ஆதீனச் சான்றோர்
தமிழகத்தின் நாவலனைத்தந்தருளுந் தகையோய்
சிவம்பெருக்கும் சித்தாந்தத் திறனாரும் புலவோய்
திருவாரும் நாவலரின் திருவடிகள் தொழுதோம்.

## நல்லூர் நல்லபிள்ளை

— குல. சபாநாதன் —

கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ்ச் சைவப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிற் சேர்த்தற்காகப் பாடசாலை அதிபர்களின் கந்தோர்க் கதவுகளைப் பலமுறை தட்டிக்கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. மேலும் தமிழ்மொழிமூலம் கல்வி கற்கும் இதர சமயப் பிள்ளைகளுக்கும் இவ்வித கஷ்டம் ஓரளவுக்கு உண்டு.

சைவசமயப் பிள்ளைகள் தம் தாய் மொழியாகிய தமிழ் மொழி மூலம் கல்வி கற்பதற்கேற்ற வசதிகள் கொழும்பில் மட்டுமன்றி தமிழர் வாழும் ஏனைய மாவட்டங்களிலும் இல்லை என்றுதான் கூறவேண்டும். இந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டம் ஒரு விதிவிலக்காக அமைந்துள்ளது ஆனல் இதே மாவட்டத்தில் சைவசமயப்பிள்ளைகள் சைவசமயச் சூழலில் படித்தற்கேற்ற சைவசமயப் பாடசாலைகள் இல்லாது சைவப்பெற்றோர் வருந்திய காலமும் ஒன்றிருந்தது என்பதை யாழ்ப்பாண வரலாறு நன்கெடுத்துக்காட்டுகின்றது. இந்தச் சீர்கேடான நிலைமையினை "ஆறுமுக நாவலர்சரித்திரம்" எழுதிய நல்லூர் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள், முதல் அதிகாரத்தில் "முன்னேர்" என்ற தலையங்கத்தில், தமக்கேயுரிய சீரிய முறையில் வரலாற்று வரிசைப்படி குறிப்பிட்டுள்ளார்கள்.

"போர்த்துக்கேய அரசினர், ஒல்லாந்த அரசினர் ஆகிய இந்த இரண்டரசினர் காலத்திலும், யாழ்ப்பாணமானது சமணர், துலுக்கர் காலத்திலே இந்தியா இருந்த நிலையினும் பார்க்க, மிக்க இழிந்த நிலையிலிருந்தது; இந்தக் காலங்களிலே இங்கே நமது சமயம் தப்பியிருந்தது தெய்வச்செயலாலன்றி வேருென்றாலுமன்று. இவ்வியாழ்ப்பாணம் பின் சகாப்தம் 1719 அளவில் இங்கிலீஷ் அரசினருடைய கையில் அகப்பட்டும், நமது சமயத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவருபவர் மிக அரியராயினர்.——கிறிஸ்தவ குருமார் இதுவே சமயமென்று நினைந்து அநேகரைக் கிறிஸ்தவராக்கத் தொடங்கினர்கள். பள்ளிக்கூடங்களை வைத்துப் பிழைப்புக்கேற்ற இங்கிலீஷ் [illegible] உத்தியோகம் வாங்கித்தருவோம் என்று சொல்லிப் படிப்பித்துப் பலரைக் கிறிஸ்தவர்களாக்கினர்கள்— யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்டோம் என்று ஊதுதற்கு வெற்றிச் சங்கைக் கையில் எடுத்தார்கள்". இங்கிலீஷ் அரசுவந்த பின்னரும் இந்த நிலைமையில் அதிகம் மாற்றம் ஏற்படவில்லை. இப்படிப்பட்ட காலமே ஆறுமுகநாவலர் பிறந்த காலம்.

இந்தயாழ்ப்பாணத்திலே, நல்லூரிலே, கார்காத்த வேளாள வருணத்திலே, பாண்டிமழவர் குடியிலே, கந்தர் என்னும் வைத்தியருக்குச் சிவகாமி என்னும் மனைவியாரிடம் பிறந்த பிள்ளைகள் எண்மருள், இறுதியிற் பிறந்த பிள்ளை ஆறுமுக நாவலர் என்பவர். இவருடைய பிள்ளைப் பெயர் ஆறுமுகன் என்பது.

இவர் பிறந்திலரேல் சைவசமயம் என்னுகும் என்பதை ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே-எல்லவரும்
ஏத்தும்பு ராணுக மங்களெங்கே
ஆத்தனறி வெங்கே யறைப் ரசங்கமெங்கே"

ஆறுமுகநாவலர் அவதரித்து, சைவசமயத்துக்குப் புத்துயிர் அளித்த பின்னரும், சைவசமயத்தைப் போதிக்க இனி யாருளர் என்று வருந்துகிறர், உடுப்பிட்டி ஸ்ரீ அ. சிவசம்புப் புலவர்.

"ஆரூர னில்லைப் புகலியர்
கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக
னில்லைத் திசையனந்த
பேரூரு மாறு முகநாவல
னில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்
கத்தைப் போதிக்கு நீர்மையரே"

இவ்விரு புலவரும் கூறுவதை நோக்குமிடத்து நாவலர் பெருமான் அவதரிப்பதற்கு முன்னர் சைவசமயம் இருந்த நிலைமையும், நாவலருக்குப்பின் சைவசமயம் தலைவனில்லாது தத்தளிக்க நேரிடும் நிலைமையும் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன.

சைவசமயக் குழந்தைகளே! நாவலர் பெருமான் இப்பொழுது உயிருடன் இருந்தால் சிதம்பரத்திலே வித்தியாசாலை நிறுவியது போலவே கொழும்பிலும்

5-ம் பக்கம் பார்க்க

## ஐயாறன் எழுதுவது

பேராதனையிலே படிக்கும் ஒரு தமிழ் மாணவியின் தந்தை நேற்று வந்து தம் புதல்வி அங்கிருந்து தப்பி வந்துவிட்ட கதையைச் சொன்னர்.

தினசரி அதிகாலையிலே மாணவர்கள் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலம் போல் வருவார்களாம். பெயர் சொல்லி மாணவியை அழைத்து, "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம், எட்டு மறிவில் ஆணுக்கிங்கே பெண், இளைப்பில்லைக் காண் என்று கும்மியடி" என்ற பாரதியாரின் கீதத்தைப் பாடி, "என்ன இன்னும் உறக்கமோ, நாங்கள் கூச்சல் போடுவது கேட்டிலையோ!" என்றெல்லாம் சொல்லி, எழுந்து வந்து ஊர்வலத்தில் கலந்துகொள்ளும்படி கேட்பராம்.

நிலைமை மோசமாகி வருவதை உணர்ந்து, அம் மாணவி, மாற்று உடையையும் எடுக்காமல், கண்டி வழியாக குருணக்கலை சென்று யாழ்ப்பாணத்துக்கு ரயிலேறி தப்பிவந்ததாகவும் ஒருவித ஆறுதலுடன் தெரிவித்தார் தந்தையார்.

அங்கு நடந்துள்ள போரிலே 78 பேர் காயமடைந்துள்ளனர். அதில் 22 பேர் மாணவிகளாம்.

அந்தப் படங்களைப் பார்த்தேன். பெரிய கண்ணராவி. காயம்பட்ட மாணவ மாணவிகளின் பெற்றேர்களுக்கு எப்படி இருக்கும்!

இதற்கெல்லாம் யார் காரணம்? மாணவர்களா? பொலிசாரா? அல்லது சர்வகலாசாலை அதிகாரிகளா? இதைப்பற்றி விசாரித்ததில் பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் தலையிட்டு இக்கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுவதாயும், உப அத்யட்சகரே ஐ. தே. கட்சியைப் பலமாக ஆதரிப்பவரென்றும், அவர் சர்வாதிகாரப் போக்குடன் இருப்பதாயும், சர்வகலாசாலைக் கமிஷன் அவரைப்பற்றிப் பாதகமாக அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாயும், அந்தச் சிபார்சின்படி நடவடிக்கை எடுத்திருந்தால் நிலைமை மேலாக இருந்திருக்குமென்றும் ஒரன்பர் தெரிவித்தார்.

உப அத்யட்சகரை நீக்க வேண்டுமென்று மாணவர்களும் கேட்டுள்ளனராம். அப்பதவி வகிப்பவர்களுக்கு அரசியல் கட்சிச்சார்புகள் இருக்கப்படாது. மேலும் அவர் மூன்று முறையாகத் தொடர்ந்து அப்பதவியை வகித்துவருகிறர். அவருக்கு வயதுமாகிவிட்டதால், அவரே அப்பதவியிலிருந்து மரியாதையாக விலகிவிடுவது உத்தமமாகும்.

மாணவர்களில் சிலர் சில தீவிரவாதிகளின் கையில் சிக்கி, தவருன வழியில் செல்லுவதாகவும் தெரிகிறது. இப்போது நடந்துள்ள பயங்கர சம்பவம், சம்பந்தப்பட்ட எல்லோரையும் சிந்திக்கவைத்து, இனி மாணவர்கள், படிப்பிலே தங்கள் பூரண கவனத்தையும் செலுத்தவும், இனி இந்வித அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கவும் உதவ வேண்டும்.

ஃ ஃ ஃ

சென்ற ஞாயிறன்று ஒரு பெரியவரை தரிசித்தேன். திருகோணமலையிலே சிவயோக சமாஜத்திலிருந்து பல நல்ல சமூகசேவைகளைச் செய்துவரும் சுவாமி கங்காதரானந்தா, அவர்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உலகமெலாம் தமிழ்பரப்ப சொன்னார் பாரதியார்-ஆனால்...'

## மதவாச்சிக்கு அப்பால் செல்ல எமது தமிழாசிரியர் மறுக்கின்றனரே!'

யாழ்ப்பாணம், செவ். பாரதி தமிழ், தமிழ்நாடு, பாரதம் உலகம்என்றகொள்கையோடு வாழ்ந்தவன். இக்கால இளைஞர்கள் பாரதியைப்பற்றி மற்றவர்கள் கூறுவதை மட்டும் கேட்டறிவதோடு நில்லாமல் அவரது முழுச் சரித்திரத்தையும் தாமாகக் கற்று அறிதல் வேண்டும். பாரதி ஒரு கோணத்திற்கு மட்டும் அடங்கக்கூடியவரல்லர். அவரைப்பற்றி பூரணமாக அறியும்போது அவரது பரந்த அறிவை நாம் காணலாம்'' என்று வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம். பாரதி பிறந்ததின விழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். பாரதிதின விழா காரைநகர் இளைஞர்கள் ஆதரவில், காரைநகர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

'பிறநாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்படி பாரதி கூறியிருக்கிறார். இன்று மொழிபெயர்ப்புத் திணைக்களத்தில்இருப்போர் சிலர் தூய தமிழில் மொழி பெயர்ப்புச் செய்வதாகக் கூறி விளங்காத தமிழில் மொழி பெயர்க்கின்றனர். மேலும் தமிழ்நாட்டு அகராதிகளைப் பின்பற்றி மொழி பெயர்ப்புச் செய்வதால் மாணவர்கள் அங்குள்ள நூல்களை மலிவாக வேண்டிப் படிக்க வாய்ப்புக் கிட்டும்' என்று விழாவிற்குத் தலைமை வகித்த இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா கூறினார்.

வழக்கறிஞர் எஸ். சிறீதரன் பேசும்பொழுது 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யவேண்டும்' என்று பாரதி கூறியிருக்கிறார். ஆனால் இன்று தமிழாசிரியர்களோ மதவாச்சிக்கு அப்பால் செல்லமாட்டோம் என்று பிடிவாதம் செய்கின்றனர்'' என்றார். வழக்கறிஞர் எம். கே. சுப்பிரமணியம் பேசும்போது பாரதி சிறந்த சமயபக்தி உடையவர் என்பதை அவரது பாடல்களால் நாம் தெரிந்துகொள்ளலாம் என்றார். திருவாளர்கள் சுப இளங்கீரன், செ. சேனாதிராசா, செல்வி க. பூரணம் ஆகியோரும் பாரதியார்பற்றி சொற்பொழிவாற்றினர்.

---

வடமாகாணத்தில்

# மேலதிக ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சி எங்கே?

## வடமாகாண ஆசிரியர் சங்கம் எழுப்பும் கேள்வி

யாழ்ப்பாணம், செவ். ''மாணவர்களின் கல்வி நலனைக்கருதி ஆசிரியர்களின் இடமாற்றங்கள் கூடியளவு தவிர்க்கப் படவேண்டும். பிரித்தானியா, அமெரிக்கா, ஜெர்மனி, இந்தியா போன்ற நாடுகளில் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதில்லை. அடிக்கடி ஆசிரியர்கள் இடமாற்றப்படுவது பாடசாலைக்கும்சமூகத்துக்குமுள்ள ஈடுபாட்டுக்கு குந்தம் விளைவிப்பதோடு கல்வியின் தரத்தை நிலைப்படுத்துவதற்கும் தடையாக இருக்கும்'.

வடமாகாண ஆசிரிய சங்க நிர்வாக சபை ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

### புதிய யோசனை

ஆசிரியர் பற்றாக் குறையினால் தமிழ்ப்பாடசாலைகள், தமிழ் பிரிவுகள் மூடப்பட்டிருந்தால் அன்றி மூடப்படுவதாகவிருந்தால் அவ்விடங்களிலிருந்து 1-12-60-க்குப் பின் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை அதே இடங்களுக்கு மாற்றுவதன் மூலமோ, அன்றி புதிய நியமனங்கள் செய்வதன் மூலமோ பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம்.

### திட்டமற்ற இடமாற்றம்

தற்போதைய இடமாற்றம் ஒரு திட்டஅடிப்படையில் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. 1-12-60க்குப் பின் யாழ்ப்பாணத்தில் மேலதிகமான ஆசிரியர்கள் உள்ளார்கள் என்பதற்கு கல்வி இலாகாவால் எதுவித விளக்கமோ அறிக்கையோ தரப்படவில்லை. உண்மையில் 1963-ல் வித்தியா பகுதியினரால் வெளியிடப்பட்ட ஆசிரியர்க்கான கைநூலில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ள பிரிவுகளில் யாழ்ப்பாணமும் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. 1-12-60க்கு முன்பு யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான பாடசாலைகள் உதவிநன்கொடை பெற்ற பாடசாலைகளாக இருந்தமையால் அப்பாடசாலைகளில் எக்காரணம் பற்றியும் மேலதிகமாக ஆசிரியர்கள் இருந்திருக்கமுடியாது. 1-12-60-க்குப்பின் இளைப்பாறிய, இறந்த ஆசிரியர்களினது காலி இடங்கள் நிரப்பப்படவில்லை. அத்துடன் கடந்தஐந்து வருடங்களாகப் பாடசாலைகளில் ஏற்பட்ட வரவுப்பெருக்கத்திற்கு உகந்ததாகப் புதுநியமனங்களும் செய்யப்படவில்லை.

### உத்தரவாதம் தர முடியுமா?

இந்தப் பெருந்தொகையான இடமாற்றம் பற்றாக்குறை இடங்களை நிரப்புவதற்கும் மேலதிக ஆசிரியர்களின் தொகையைக் குறைப்பதற்கும் செய்யப்படுவதானால் தென்னிலங்கையிலிருந்து வட இலங்கைக்கு மேலும் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என்பதற்கு உத்தரவாதம் தர முடியுமா?

பாடசாலைகளிலிருந்து மேலதிக ஆசிரியர்களே மாற்றப்படுகிறார்களென்றால் பயிற்றப்பட்ட புதிய ஆசிரியர்களும் மாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களும் அப்பாடசாலைகளுக்கு எப்படி நியமிக்கப்பட இருக்கின்றார்கள்.

இம்மாற்றங்கள் நிலையான திட்டமற்ற முறையில் அமைந்துள்ளமையால் பாரபட்சமானதென்றும் ஒருதலைப்பட்டதென்றும் குற்றஞ்சாட்ட இடமுண்டு. இம்மாற்றங்கள் செய்யப்படுவதற்குமுன் எங்கள் சங்கமோ அல்லது எங்கள் தாய்ச்சங்கமோ கலந்தாலோசிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட ஆசிரியர் சங்கங்களைக் கலந்தாலோசிக்காது செய்யப்படும் எந்தவித இடமாற்றத்திட்டத்தையும் எங்கள் சங்கம் எதிர்க்கும்.

---

# நாவலர் விழா நிகழ்ச்சிகள்

நாவலரின் குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் ஆதரவில் அவர்தம் ஆச்சிரமத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை கொண்டாடப்படும்.

திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

சிவநாமமோதுதல்: நல்லூர் திரு. க. நவரத்தினம் குழுவினர். நாவலர் சற்குரு மணிமாலையோதல்: பண்டிதர் த. சுப்பிரமணியம்.

நாவலர் சீடபரம்பரை: பண்டிதர் செ. குலரத்தினம்.

நாவலர் வகுத்த சைவ இலக்கியம்: வித்துவான் க. கணபதிப்பிள்ளை.

திரு. வை. முத்துக்குமாரசாமி ஆங்கிலத்தில் எழுதிய ''நாவலர் இந்துக்களின் சீர்திருத்தக்காரர்'' என்னும் நூல்அரங்கேற்றம்.

மேற்படி நூலின் கருத்துரைகளை திருவாளர்கள் நம். சிவப்பிரகாசம், மு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, ச. அம்பிகைபாகன், உ. சோமசேகரம் ஆகியோர் வழங்குவர்.

நூல் ஆசிரியர் வை. முத்துக்குமாரசுவாமி பதிலுரை வழங்கியகின் திரு. பரம் தில்லைராசாவினால் ஒழுங்கு செய்யப்பெற்ற இன்னிசை விருந்தும் இடம்பெறும்.

---

# நல்லூர் நல்லபிள்ளை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதர இடங்களிலும் உங்களுக்காகச் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவுவதற்குக் கங்கணம் கட்டியிருப்பார். அவ்வித அதிர்ஷ்டம் உங்களுக்கு இல்லாமற்போய்விட்டது.

நல்லூரிலே அவதரித்த பிள்ளை, நல்ல பிள்ளைஎன்று பெயர் பெற்றார். சைவ சமயக்குழந்தைகளாகிய நீங்களும் நல்ல பிள்ளைகள் என்று பெயரெடுக்கவேண்டும். நீங்கள் நல்ல பிள்ளைகள் என்று பெயர்கேட்க நாட்கள் பல செல்லும். இதற்கு இடையறு முயற்சி தேவை. ஆனால் கெட்டபிள்ளைகள் என்று பெயர் எடுக்க ஒருநாட்கூட தேவையில்லை. அதிக முயற்சியும் தேவையில்லை. உங்கள் பெற்றார், உற்றார், உறவினர், குரு, சான்றோர் ஆகியோர் உங்களை நல்ல பிள்ளைகள் என்று அழைக்கக்கூடிய முறையில் வாழ முயலவேண்டும்.

நீங்கள் இவ்வுலகிலே பிறந்துவிட்டால் என்ன செய்யவேண்டும் தெரியுமா? ''சடமொன் றெடுத்தால் புவிக்கு நல்லவனென்று தன்பேர் விளங்கவேண்டும்'' என்று கூறுகிறார் 'குமரேச சதகம்' பாடிய குருபாததாசர் அவர்கள். நல்ல பிள்ளை யார் என்பதை அம்பலவாணக் கவிராயரும் தாம் பாடிய அறப்பளீசுர சதகத்தில் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

''தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள்
செய்துவரு தருமங்கள்
செய்துவரலுந்
தன்மமிகு தானங்கள்
செய்தலுங் கனயோக
சாதகனெனப்படுதலும்
மங்குதலிலாததன் தந்தை-
தாய் குருமொழி
மறுது வழிபாடுசெயலும்
வழிவழி வருந் தமது
தேவதா பத்தியுரி
மார்க்கமுந்தீர்க்காயுளும்
இங்கித குணங்களும்
வித்தையும் புத்தியும்
ஈகையுஞ் சன்மார்க்கமும்
இவையெலாம்உடையவன்
புதல்வனும் அவனேயே
ஈன்றவன் புண்யவானும்.
திருவள்ளுவநாயனுடும் [illegible]
அதிகாரத்தில்.

---

# மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம்மாநகரசபையின் வட்டார எல்லை நிர்ணயம்பற்றி மார்ட்டின் கமிஷன் அறிக்கையிலுள்ள சிபார்சுகளை அமுல் நடத்துவதற்காக வட்டார எல்லைக் குறிப்புகள் பற்றி விபரம் அறிவதற்காக நகரமைப்புதிட்டப்பகுதியைச் சேர்ந்த திரு. புல்லாங்குலம யாழ்ப்பாணம் வந்து சில புள்ளி விபரங்களை எடுத்துக் கொண்டு இன்று கொழும்பு சென்றுள்ளார்.

---

# இடமாற்றம்

சுழிபுரம், திங்கள் சுழிபுரம் கிராமசபையில் ஓவர்சியராகக் கடமையாற்றிய திரு. அ. க. அ. மீராலெப்பே புத்தளம், கல்பிட்டி கிராமசபைக்கு அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் சுழிபுரம் கிராமசபை ஏற்பட்டதிலிருந்து இக்கிராமசபையில் ஓவர்சியராகக் கடமையாற்றியுள்ளார்.

---

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் முதல்முதலாக யாழ்ப்பாணம் வந்தார். திருகோணமலையைவிட்டு அவர் புறப்படுவதே இதுதான் முதல் தடவையாம். அவரைக் கண்டதுமே, அவரது முகப்பொலிவும், தவவலிவும் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளை நினைவூட்டியது. மெதுவாகவும் அடக்கமாயும் செட்டாகவும் பேசுகிறார். ஆனால் மணிமணியான வார்த்தைகளே வருகின்றன, ஒழுக்கத்தையும், மனத்தூய்மையையும் சேவை, தியாகம் இவற்றையும் வற்புறுத்துகின்றார். இரண்டு நாட்கள் இங்கு தங்கிஇருக்கையில், பலரது மனதையும் கவர்ந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

சுவாமிசுத்தானந்தபாரதியார், சென்னையிலே ஒரு கூட்டத்தில் பேசுவதற்காகக் காரில் செல்லுகையில், ஒரு விபத்து ஏற்பட்டு முழங்காலில் காயமாம். அவர் ராய்ப்பேட்டை ஆஸ்பத்திரியில் குணமடைந்து வருவதாயும், இப்போதும் நாளொன்றுக்கு 20 மணி நேரம் வேலைசெய்துவருவதாயும், இங்கு ஓர் அன்பருக்குக் கிடைத்த ஒரு கடிதம் தெரிவிக்கின்றது. அவர் சீக்கிரம் குணமடைந்து, நீடூழிவாழ்க!

ஃ ஃ ஃ

முன்னியாநின்ற முதல்வா போற்றி மூவாத மேனியுடையாய் போற்றி, என்னியா யெந்தை பிரானே போற்றி யேழினிசையே யுகப்பாய்போற்றி, மன்னிய மங்கை மணாளா போற்றி மந்திரமும் தந்திரமுமானாய்போற்றி, கன்னியார் கங்கைத் தலைவா போற்றி கயிலைமலையானே போற்றி போற்றி.

—அப்பர் அடிகள்.

---

'பெறுமவற்றுள் யாமறிவ
தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற'

என முதலாவதுகுறளிலேயே அறிவு அறிந்த மக்கள் என அடைகொடுத்துச் சிறப்பித்துள்ளார்.

ஈழநாட்டிலே இவ்வித 'நல்லபிள்ளை' என்ற பெயர் எடுத்தவர்களுள் முதல்வரிசையில் முதலாம் பிள்ளையாக நிற்பவர்தான் நல்லூர் நல்லபிள்ளை க. ஆறுமுகன். இவர் பிற்காலத்தில் ஆறுமுகம், ஆறுமுகநாவலர், நாவலர் என்று அழைக்கப் பெற்றார்.

---

# சைவமும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் தாய்மொழியிலேயே அரிய விஞ்ஞானக் கருத்துக்களைக் கற்றறியக்கூடிய வாய்ப்பை அளித்தவர் நாவலர்.

தமிழ் பேசும் மக்கள் அன்னியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபொழுது, சைவசமயமும் பிற சமயத்தவர்களின் பிடியிற் சிக்கி அவல நிலையில் இருந்தபொழுது தமது விடா முயற்சியிலும் வல்லமையினாலும் அந்நிலையை மாற்றிச் சைவத்தைத் தழைக்கச் செய்த பெருந்தகை நாவலர்.

அதே நேரத்தில் சமதர்மக் கொள்கையை நிலை நாட்டியவர் நாவலர். பிறசமயத்தவர் உயிர் நூலை மொழிபெயர்க்கும் பொறுப்பைப் பெற்ற நாவலர் அதைச் செய்து முடித்த தரத்தின் உயர்ச்சி அவரது கடமை உணர்ச்சியின் உயர்ச்சியைக் காட்டுகின்றது. சைவத்தை நசுக்கியதாகக் கருதப்பட்ட மதத்தின் உயிர் நூலான பைபிளை உயர்வுற, நயம்படத் தமிழில் பெயர்த்து தமிழ்பேசும் கிறித்துவப் பெருமக்களுக்கு வழங்கி ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற தத்துவத்தை உலகமக்களுக்குப் புகட்டியவர் நாவலர்.

சுருங்கக்கூறின், நாவலர் தமிழை வளர்த்தார்; அதன்மூலம் சைவத்தைப் பரப்பினார். சைவமும் தமிழும் இரண்டறக் கலந்தவை என்ற உண்மையை உணர்த்தினார். தமிழ் மக்கள் மற்றைய மொழிகளையும், மறுசமய நூல்களையும் கற்கவேண்டுமென்றும் விரும்பிய நாவலர் பெருமான், அவர்கள் தமது சொந்த மொழியின், மதத்தின் தனித்தன்மையையும் நிலைநாட்டவேண்டுமென்றும் விரும்பினார்.

தமிழ்மொழி வாழவேண்டும், அதேநேரத்தில் மற்றைய மொழிகளும் வாழவேண்டும். சைவம் தழைக்கவேண்டும், அதேநேரத்தில் மறுசமயங்களும் தழைக்கவேண்டும் என்னும் அரும்பெரும் கருத்தைப் பரப்பியதன்மூலம் அவர் சைவப்பெருமகன் மட்டுமல்லாது, தமிழ்ப் பெருமகன்மட்டுமல்லாது ஒப்பாரும் மிக்காருமற்ற உலகப் பெருமகனேயாகிவிட்டார் என்று கூறினால் மிகையாகாது.

இப்படிப்பட்டஓர் பெருமகனுக்கு விழாவெடுக்கும் பெரியார்கள், விழாவெடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது, அவரின் அரிய கருத்துக்களைப் பரப்பி, அதேநேரத்தில் எல்லோருக்கும் ஓர் முன்மாதிரியைக் காட்டக்கூடிய வகையில் அவற்றைச் செயற்படுத்த எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக,

---

# புதிய சங்கம்

சுழிபுரம், திங்கள் வலிகாமம் மேற்கு ஐக்கிய கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள் 'கூட்டுறவுப் பணியாளர் சங்கம்' என்ற பெயருடன் புதிய சங்கமொன்றினை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்: த, சீவரத்தினம், உபதலைவர்: வ, கனகசபை, காரியதரிசி: இ. தில்லையம்பலம், உபகாரியதரிசி; நா. செல்வராசன், தனாதிகாரி: தா. நாகலிங்கம், நிர்வாகிகள்: க. துரையப்பா, க. முருகேசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது விஞ்ஞானம்

# செயற்கை எலும்பு

— இ. கிறிஸ்ரி —

மண்டை ஓட்டில் சிறு காயங்கள் ஏற்பட்டால், அதைப் புதுப்பிக்க பாதிக்கப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள எலும்புகள், விலா எலும்புகள், தோள் பட்டை எலும்புகள், முன் பாதத்தின் எலும்புகள் இவற்றை எடுத்து டாக்டர்கள் பயன் படுத்துகிருர்கள். ஆனுல், காயம் பெரிதாக இருந்தால், இந்த எலும்புகளைப் பயன்படுத்துவது நல்ல பயனைத் தருவது இல்லை, ஆகவே சமீப காலங்களில் எலும்புக்குப் பதிலாக ''பிளாஸ்டிக்'' பொருள்களை பயன்படுத்தி வருகிருர்கள். ஆனுல், இவையெல்லாம் பொருத்தப்பட்டு, நாளாவட்டத்தில் பலவீனமடைந்துபோகின்றன. அவற்றில் விரிச்சல் ஏற்படுவதுடன், உருவமும் மாறிவிடுகின்றன. எலும்புக்குப் பதில் பயன்படுத்த ''டான்டலம்'' என்ற உலோகம் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது. தங்கம் போல இவ்உலோகம் நீண்டநாள் இருக்கக்கூடியது. இவ்வுலோகம் துருப்பிடிப்பதில்லை. அமிலங்கள் கரையவும் மாட்டாது. உப்புக்களால் பாதிக்கப்படுவதுமில்லை. ஆகவே, இது ரணசிகிச்சைக்கு ஏற்ற ஓர் உலோகமாகும். தலையில் பாதிக்கப்பட்ட எலும்பைப்போல, உருவம்செய்து கொள்ளுகிருர்கள். இதை அச்சா வைத்துக்கொண்டு, தேவையான அளவும், உருவமும், வளைவுமுள்ள டான்டலத் தகடுகளைத் தயாரிக்கிருர்கள். எலும்புடன் பொருந்துவதற்குச் சாதகமாக விளிம்புகளில் துவாரங்கள் போடப்படுகிறது. பின்பு இத்தகட்டை பாதிக்கப்பட்ட இடத்தில் வைத்து நூலினுல் கட்டிவிடுகிருர்கள். இத்தகடு உடலில் உள்ள தசைகளுடன் இணைந்து விடுகிறது. ரஷ்யாவிலுள்ள கோர்க்கி ஆராய்ச்சி நிலையத்தில் இந்த உலோகம் பயன்படுத்தப்படுகிறது.

தொடர் நவீனம்

# வாஞ்சி மலை

— க. கனகலிங்கம் —

சிறுவர்கள் திறந்தவாயை மூடாமல் தாத்தாவின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்த நேரத்தில். . ''சரி. . . நேரம் போட்டுது நாளைக்கு சந்திப்போம்'' என்று கூறிவிட்டு எழுந்து போய்விட்டார்.

அடுத்தநாள்.

வழக்கம்போல் சிறுவர்கள் வெண் மணற்பரப்பில் கூடி கிழவரின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தனர். கிழவரும் வந்திடவே அவரைச் சுற்றி நான்கு புறமும் அமர்ந்திருந்தனர். கிழவர் தனது வரண்ட தொண்டையை ஒருமுறை கனைத்துக்கொண்டு தொடர்ந்தார்.

''அந்தக் கிழவருக்கு எங்கிருந்துதான் இத்துணை பலம் வந்ததோ தெரியவில்லை. பலகாத தூரம் சென்றதும் இவரிடமிருந்து தப்பியோட முயற்சித்தேன். கிழவர், அற்பபதரே என்னிடமிருந்தா தப்பியோட முயற்சிக்கிருய்! நான் யார் தெரியுமா. வாஞ்சிமலை நாட்டு அசுரனுன மலை விழுங்கியின் மெய்க்காவலன். என் பெயர் கொடும்பாவி!'' என்று மொழிந்து வானமே அதிரும்படியாக பலம்கொண்ட மட்டும் சிரித்தான் அக்கிழவன். கானகம் சிரித்தது. மலைகளும் அதிர்ந்தன. நான் பயத்தினுல் நடுநடுங்கினேன். ''ஆண்டவனே இவ்வேளையில் என் அன்னை என்னைக் காணுது என்ன பாடுபடுவாளோ. தந்தையாரிடம் சென்ற என்னை, திரும்பிவரக் காணேன் என்று கூறிக்கலங்கியழமாட்டாளா? என்று கூறிக் கதறியழுதேன்.

''தாத்தா நான் உங்களுக்கு என்ன தவறு செய்தேன். எதற்காக என்னை இழுத்துவந்தீர்கள்'' என்று இரந்துகேட்டேன்.

''அடேய்முட்டாள்வாயை மூடடா எதற்காக கொண்டு செல்கிறேன் என்று போகப் போக நீயே உணர்வாய்'' என்று கூறி பலவந்தமாக இழுத்துச்சென்ருன், அந்த நயவஞ்சகன். என்ன ஆச்சரியம்; கொஞ்சத்தூரம் தான் சென்றிருப்பேன்; ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்த கிழவன் இப்பொழுது நடுத்தர வயதுடைய அரக்க உருவத்தை எடுத்ததுமாத்திரமல்லாமல் ஆகாயத்தில் பறவைபோல் பறக்கவும் ஆரம்பித்தான் அக்கிழவன். அவனின் கழுத்தை பற்றிக் கொண்டிருந்தேன் நான். கொடும்பாவி வானத்தில் பறந்துகொண்டிருந்த வௌவால், கிபுலி ஆகிய பறவைகளை பிடித்து உண்டவண்ணம் பறந்து கொண்டிருந்தான் பல மணித்தியாலங்களில் ''குய் குய்'' என்ற சத்தத்துடன் தரையைநோக்கி வந்துகொண்டிருந்தான். சிறிதுநேரத்தில் மரங்கள் அடர்ந்தகானகத்தின் மத்தியில் இறங்கினுன். பாரசூட்டைப் பிடித்துவந்த விமானி தரையில்இறங்குவதுபோல், கொடும்பாவியின் கழுத்தில் இருந்து இறங்கினேன்.

மழைக்காலத்தில் புதரில் இருந்து புறப்படும் ஈசல்கள் போன்று கானகத்தின் நாலாபுறங்களிலிருந்தும் பயங்கர அசுரர்களும் அரக்கர்களும் பலத்த சத்தத்துடன் வந்து என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். என்ன ஆச்சரியம் வான்போல் உயர்ந்த தோற்றம், வாயை விட்டு வெளிக்கிளம்பிய கொடூர பற்கள், பருத்த வயிறு, நீண்டு வளர்ந்த தாடி, நிலத்தில் அரையும் சடை ஆகியவற்றைச் சொந்தமாகக் கொண்ட வலிய உருவத்தைக் கண்டதும் எல்லா அசுரர்களும் அடக்கமாக தலைசாய்த்து மரியாதை செலுத்தினர், இப்பயங்கரமனிதனே இவர்களுக்கெல்லாம் தலைவன் என்று அறிந்துகொள்ள எனக்கு அதிக நேரம் செல்லவில்லை. அம்மனிதன் தனது கொவ்வைப் பழம் போன்ற சிவந்த கண்களை உருட்டியபடி இருக்கைகளையும் நீட்டிய வண்ணம் என்னை நெருங்கி வந்துகொண்டிருந்தான். நான் பயத்தினுல் நடுநடுங்கி தரையில் சாய்ந்தேன்'' இக்கட்டத்தில் கதை கேட்டுக்கொண்டிருந்த சிறுவர்களது முகத்தை நோக்கினுர் கிழவர். பதிலுபகாரமாக அச்சமும் ஏக்கமும் கலந்த புன் சிரிப்பை உதிர்த்தனர். சிறுவர்கள் ஆதவன் மறைவை பறவைகள் நினைவூட்டவே கிழவர் அத்துடன் கதையை நிறுத்தி விட்டு தாத்தா [illegible] கொண்டே சிறுவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்ருர்.

(தொடரும்)

# ஈழத்தின் பெரியார்கள்

— சி. சுதந்திரராஜா —

இந்து மகாசமுத்திரத்தின் நித்திலமான நமது ஈழத்திரு நாட்டிலே, பாரோர் போற்றும் பற்பல அறிஞர்களும், தமது வாழ்க்கையை பிறருக்கென அர்ப்பணித்த மேதைகளும் அவதரித்திருக்கிருர்கள். இத்தகைய ஈழத்துப் பெரியார்களைப் பற்றி இரத்தினச் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

ஈழத்திருமணி நாட்டினில், ஆங்கிலேயர்களது ஆதிக்கம் ஓங்கி வளர்ந்திருந்தபோது, விடிவெள்ளி போல பொன். இராமநாதனை ஈழத்தாய் ஈன்றெடுத்தாள். இவர் கொழும்பு ரோயல்கல்லூரியில் கல்வி கற்றுப் பின்னர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்ருர். 1922-ல்சட்ட நிருபணசபையில் கல்வியறிவுடைய இலங்கையருக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். 1915-ல் இராணுவச் சட்டம் பிரகடனஞ் செய்யப்பட்டு பல சிங்களத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். சிலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவ் அநீதியைக்கண்டித்துப் பகிரங்க விசாரணை செய்து சிங்கள - தமிழ் மக்களது ஒற்றுமைக்கு வழி கோலினுர். பற்பல சேவைகளிலும் சிறந்து விளங்கிய இராமநாதனுக்கு ஆங்கில அரசாங்கம் 'நைற் (சேர்)' பட்டத்தை வழங்கியது.

தமிழை வளர்ப்பதற்கென 1892-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 27-ம்நாள் விபுலானந்தர் பிறக்கப்போவதாக எந்த வால் நட்சத்திரமும் வழி காட்டவில்லை. இளமையில் தமிழிலிருந்த அளவு கடந்த பற்றுதலால் சி. வை. தாமோதரம்பிள்ளை, பண்டிதர் கந்தையா போன்ற முத்தமிழ் வித்தகர்களிடமிருந்து சங்கத்தமிழ் இலக்கியங்களைக் கற்றுத் தேறினுர். இவர் ஆசிரியராகக் கடமையாற்றுங்காலையில் சிறந்த போதனு முறைகளைக் கையாண்டு மாணவர்களது நல்லபிமானத்தைப் பெற்ருர். நிலையற்ற வாழ்க்கையை வெறுத்துத் துறவியாகி, இலக்கியப் பொக்கிஷங்களாக 'பூஞ்சோலைக் காவலன்', 'ஆங்கிலவாணி', 'ஐயமும் அழகும்' போன்று பிற பல நூல்களை ஆக்கி தமிழோசையினை தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரப்பி தமது தாயகத்திற்கும் தமிழுக்கும் பெருமை தேடித் தந்தார்

கலைக்கொடு கலாயோகி ஈழத்தில் இல்லையே என்ற பெருங்குறையை சேர். முத்துக்குமாரசுவாமிக்கும் எலிசபெத் கிளேபீபி என்ற ஆங்கில மாதுவுக்கும் பிறந்த ஆனந்தகுமாரசுவாமி தீர்த்துவைத்தார். லண்டன் வீக்ளி கல்லூரியில் கற்றுப் பட்டதாரியாகினுர். தாதுப்பொருள் ஆராய்ச்சித் தலைவராக இருந்து சிறந்த சேவைகளைச் செய்து மக்களது அபிமானத்தைப் பெற்ற இவர், 1903ல் தோரியனைற் என்னும் கனியத்தைக் கண்டுபிடித்தார். இதற்கு லண்டன் பல்கலைக் கழகம் 'டாக்டர்' என்ற பட்டத்தை வழங்கி ஆனந்தரை கௌரவித்தது. சிற்பத்திறன்களை எல்லாம் ஆராய்ந்து தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்ற ஒரே பரந்த நோக்குடன் பற்பல கலை நூல்களைப் படைத்தார். 'ஈழத்துச் சித்திரங்கள்', 'சிவநடனம்', 'சிங்களக் கலை' என்பன அவர் ஆக்கிய நூல்களில் சில. கீழைத்தேய கலைப் பொருட் பகுதித் தலைவராக வட அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரக் கண்காட்சிச் சாலையில் கடமையாற்றி கிழக்குலகக் கலைகளையெல்லாம் மேலைத் தேசத்தவர்களுக்கு விளக்கினுர்.

அருணுசலம் அவர்கள் வளமிகு மானிப்பாயில் பிறந்து கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் உயர்தரக் கல்வி கற்று 1875-ல் பாரிஸ்டர் பட்டமும் பெற்ருர். இவர் தமது வாழ்வினை இலக்கியம், சமயம், கலாசாரம், சரித்திரம், புதைபொருள் ஆராய்ச்சி போன்றவற்றிற்கு அர்ப்பணித்தார். 'பொலநறுவை வெண்கல உருவங்கள்' 'முருக வழிபாடு' போன்ற புத்தகங்கள் இவரது எழுதுகோல் முனையிலிருந்து உருவானவை. இலங்கைத் தேசிய காங்கிரஸையும், சமூக சேவை சங்கத்தையும் ஆரம்பித்து வைத்து அவற்றின் தலைவராகவும் கடமையாற்றி பெரும் புகழீட்டினுர். இவரது திறமையான அரசியற் சேவைகளைப் பாராட்டி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் தமது பாக்கிங்ஹாம் மாளிகையில் 'துரகபதி' எனப் பொருள் படும் சேர் பட்டத்தை வழங்கினுர்

பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போல, நமது எழில் மிகு தாய்த்திருநாட்டிலே இவர்களைப் போன்று தர்மத்தைப் பரப்பிய அநகாரிக தர்மபாலா, நாவில் வல்ல நாவலர் பெருமான், பாவில் வல்ல சோமசுந்தரப் புலவர், அரசியல்மேதை சேனநாயக்கா போல பற்பல உத்தமர்கள் அவதரித்திருக்கிருர்கள். அன்னவர்களது அடிச்சுவட்டை பின்பற்றுபவர்களுக்கு வாழ்வு வளம் பெறும் என்பது வெள்ளிடைமலையன்ருே.

# வழி காட்டி

செயலை விதையுங்கள் பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள் குணம் உருவாகும். குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உருவாகும்.

— போர்டுமன்

உலகில் நீங்கள் கேட்க விரும்பும் எந்த ஒன்றைக் குறித்தும் உங்களில் இருவரிடையே ஒற்றுமை ஏற்படுமாயின் பரலோகத்திலிருக்கும் எமது பிதாவால் அது நிறைவேற்றி வைக்கப்படும்.

— ஏசுநாதர்

மௌனமாக இருப்பதைவிட அறிவைத் தேடுவோருடன் உரையாடுவது நல்லது. தீயசொற்களைப் பேசுவதைவிட மௌனமாக இருப்பது நல்லது.

— நபி

பணத்தை மட்டுமாம் சேர்த்துவிடு. உலகம் முழுவதும் சேர்ந்து உன்னை ஒரு பணியாளன் என்று கூறத் தயங்காது.

— பெர்னுட்

கைக்கு அருகிலுள்ள முதல் கடமையை ஆற்றுங்கள். அடுத்த கடமை என்னவென்பது தன்னுலே புலப்படும்.

— தாமஸ்கார்லைன்

ஆசைகள் வளர வளர தேவைகளும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

— பிளேட்டோ


## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு? இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கட்டட திறப்புவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

காரைநகர் சிவஞானோதய வித்தியாசாலை புதிய கட்டடத் திறப்புவிழா வட்டார வித்தியாதரிசி திரு. ச. சபாபதி தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை எம். பி திரு. அமிர்தலிங்கம் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், திங்.

செட்டிகுளம் வீனஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் வவுனியா இயந்திரசாதன மரத்தொழிற் பாடசாலைக்குமிடையே அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இயந்திர சாதன மரத்தொழில் பாடசாலை 3—0 கோல்கள் போட்டு வீனஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது.

வவுனியா முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. வேலாயுதம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை

REGAL—JAFFNA
NOW SHOWING
Stewart Granger
Sylva Koscina
IN
SWORDS MAN
OF SIENNA

# தேசீய வீரர் நாவலர்

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

கள் புனருத்தாரணம் பெற வேண்டுமென்று உழைத்தார். அன்று முழுதும் கைகூடாது விடினும் இன்றுநிறைவேறுகின்றன. யாழ்ப்பாணம் கரையூரில் (குருநகர்) பேதி நோய் கண்டபோது இவர் ஆற்றிய சமூகப் பணிகள் வியக்கத்தக்கதாகும்.

### அரசாங்கநிர்வாகஊழல்களை அம்பலப் படுத்தினுர்

இவர்காலத்தில்துவைனம் என்றவரே அரசாங்க அதிபராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினுர். துவைனம் துரையின் நிர்வாகத்தில் ஊழல்கள்அதிகரித்தன. நிர்வாக யந்திரமே 'மக்கர்' பண்ணத் தொடங்கியது. பொதுமக்கள் பெருந்துன்பத்துக்குள்ளாஞர்கள். இவைகளைக் கண்டு பொறுக்காத நாவலர்., மேலானவர்களுக்குமுறையீடு செய்தார். அரசாங்கத்திஞல் விசாரணைக் குழு நிறுவப்பட்டது. ஆனல் துவைனம்துரைபந்தம்பிடிப் போரால் காப்பாற்றப் பட்டார். ஆஞல் இவ்வளவில் விட்டாரா நாவலர். அக்காலப்பிரபல்ய தலைவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து லண்டனிலுள்ள குடியேற்ற நாட்டுக்காரியதரிசிக்கு மனுப்பண்ணி வெற்றிவாகை சூடினரென்ருல் நாவலரின் சமூகப்பணிக்கு வேறென்ன உதாரணம் வேண்டும். அடிமையாக இருந்த நாட்டிலே ஆளும்வர்க்கத்துக்குஎதிராக ஓர் இயக்கம் நடத்தி வெற்றிக்கொடி நாட்டுவதென்ருல் நாவலருக்கு நெஞ்சுரமும் துணிவும் வேண்டுமென்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

### தீர்க்கதரிசனத்துடன் தொண்டாற்றிய தீரர்

தமிழ்மொழி அரியாசனம் ஏறவேண்டுமென்று விரும்பினுர். திரிகரணசுத்தியோடு அயராது உழைத்தார். எனவேதான் அவரது பணிகள் பலவற்றையும் தமிழில் செய்துவந்தார். பைபிளை மொழிபெயர்க்கக்கூடியஆங்கில அறிவு நிரம்பிய இவர் ஆங்கிலத்தில் கூடப்பணிகள் புரிந்திருக்கலாம். இப்படி இவர்செய்திருந்தால் இன்று ஆங்கில உலகம் இவரைப் போற்றும். ஆஞல்இவருக்கு தமிழணங்கின்மீது இருந்த பற்றிஞலேயே தன்வாழ்நாளையே தமிழுக்காகவும், சைவத்திற்காகவும் அர்ப்பணித்து வாழ்ந்தார். தமிழ் இந்துப் பல்கலைக்கழகங்கள் நிறுவிஞல்தான் தமிழ்மொழியையும் சைவத்தையும் விருத்தியுறச்செய்யமுடியும், அரியணைமீது இருக்கச் செய்யமுடியும் என்ற கருத்துக்கூட நாவலருக்கு அக்காலத்தில் இருந்ததாம். இன்று தமிழ்,இந்துப்பல்கலைக் கழகங்கள் நிறுவ முயற்சியெடுக்கும்அத்தனைபெருமக்கட்கும் நாவலர் ஆசிகிடைக்குமென்பதில் ஐயமில்லை.

### அரசியலில் நாவலர்

இலங்கையின் அரசியலில் தான் நேரடியாக ஈடுபட முடியாவிட்டாலும் அரசியற்சேவைசெய்ய முன்வருபவர்களுக்கு சேவை செய்வதன்மூலம், ஒத்துழைப்பு நல்குவதன் மூலம், உதவி ஊக்கம் காட்டுவதன்மூலம் ஒரு பொதுநலச் சேவையைச் செய்ய முடியும் என்பதை நன்குணர்ந்திருந்தனர். நாவலர் தனது ஏனைய பணிகள் நாட்டுக்கு அவசியமென்று உணர்ந்ததஞல் நேரடியாக அரசியலில் குதித்துத்தேர்தலில் இறங்காதிருந்தனர் போலும். இலங்கையின்சுதந்திரத்திற்கு வித்திட்ட அரசியல் வாதிகளில் முதன்மை வகிக்கும் இராமநாத வள்ளனுக்குச் சட்டசபைக்குச் செல்லஆதரவளித்துமேடைமேடையாகப்பேசி சட்டசபைக்கு அனுப்பிவைத்தவர் நவலரவர்கள்தான். ராமநாதனவர்கள் அரசியலில் ஈடுபட்டதஞலன்றே நம்நாடு விடுதலைபெற அத்திவாரமிடப்பட்டது. எனவே இந்தநாட்டின் சுதந்திரத்திற்கு அடிகோலியவர் நாவலரென்ருல் வெறும்புகழ்ப்பேச்சல்ல.

### இலவசக் கல்வியும் சீர்திருத்த வாதியும்

இலவசக் கல்வி கற்பிக்க முடியுமென்று ஈழநாட்டிலே காட்டிவைத்த பெருமையும் நாவலருக்கேயுரியது. நாவலர் தனது காலத்தில்மாணவர்களுக்கு இலவசக் கல்வியளித்துப் பெரும்பணிசெய்ததும் போற்றத்தக்கதே.

### நாவலர் கௌரவிக்கப்படுதல்

நாவலர் சேவைகளையும் 'நா' வன்மையையும் கண்டு திருவாவடுதுறை ஆதீனம் 'நாவலர்' என்னும் பொருத்தமான பட்டப் பெயர் கொடுத்துக் கௌரவித்தது. நாவலர் ஒரு இனமக்கள்முதலில் மதம்மாறுவதே பிற்காலத்தில் இனம்மாறுவதற்கும் அடிகோலுவதாகும் என்று நன்குணர்ந்திருந்தனர் போலும், இதஞற்போலும் மதமாற்றத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் பெரும் சேவையைச் செய்திருக்கிருர். நாவலர் வாழ்க்கை ஒவ்வொருகணமும் 'சேவை' 'சேவை' என்றே சென்றுகொண்டிருந்தது 'என்கடன்பணிசெய்து கிடப்பதே' என்றும் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்றும் முழங்கிய நாவுக்கரசர் வழிவந்தவரல்லவா? மக்களுக்குச் செய்யும் சேவையே இறைவனுக்குச் செய்யும்

சேவையென்று கண்டுகைம்மாறு கருதாது பணியாற்றியவர். பீற்றர் பேர்சிவலுடனும் அக்கால அரசாங்க ஏஜண்டருடனும் இட்டவா தங்களைஎண்ணிப்பார்த்தோமாஞல் அவரது வீரதீரமும் திடநம்பிக்கையும், மனவுறுதியும், அஞ்சா நெஞ்சமும் தெற்றென விளங்கும் பெரிய மனிதர்களுடைய வாழ்க்கை சாதாரண மனிதர்களிடத்தில் ஒருபிரமையை உண்டுபண்ணி விடுகிறது. இதஞல் இவர்கள் மக்கள் மனதினின்றும் மறைவதில்லை. ஆகவே மக்கள்இவர்களைத் தெய்வமெனப் போற்றிப்புகழ்வதில்வியப்பில்லை. வருங்காலத்தில்என்ன நடக்க வேண்டுமென்றுதெரிந்து கொண்டே சுதந்திர உணர்ச்சியைத் தூண்டிவிட்டனர் போலும். நாவலர் சேவையை யார் நீடித்துச் செய்யப்போகிருர்கள். இக்காலத்தில் அநேக நாவலர்கள் தோன்றவேண்டும். இடுக்கண்களைய முற்படவேண்டும்.

நாவலர்பெருமான் சிறந்த சீர்திருத்தவாதி, பெரும் அறிஞர், அறிவுக் களஞ்சியம் ஆண்மையின் பொக்கிஷம். அன்னியர்களின் அட்டூழியங்களை அடக்கவந்த அவதாரபுருடர், சித்தாந்தச் சொற்கொண்டல், பிரசங்கப் பேரறிஞர். நூல்கள் பதிப்பதில் திறமை கண்டவர். பைபிளை மொழிபெயர்த்தவர், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் திறவுகோல். ஆலயச் சட்டத்திற்கு அடிகோலிய அண்ணல். தீர்க்க தரிசனத்துடன் தொண்டாற்றிய தீரர். செயற்கரிய பல தொண்டுகளைச் செய்த செம்மல். வீர சுதந்திரத்துக்கு வித்திட்ட வீரர்.

நாவலர் இன்னும் சிலகாலம் வாழ்ந்திருந்தால் பல அரிய தொண்டுகளையெல்லாம் செய்திருப்பார். நாவலர் வாழ்க்கை வரலாறு வெறும் கட்டுக்கதையல்ல. சென்ற நூற்ருண்டில் நமது யாழ்ப்பாணத்தில் தோன்றி, 1879-ல் மறைந்த ஒரு பெருமகஞரின் உண்மைச் சரித்திரம். இன்று கலங்கி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நாவலர் வாழ்க்கை நல்லபாடம் கற்பிக்கவேண்டும். தமிழர்கள் தன்மானமுடன் வாழ வழிகாட்ட வேண்டும்.

### நாவலருக்கு நாம் செய்யவேண்டியன

அவர் தொண்டைப் பின்பற்றிப் பணியாற்ற வேண்டும்.

நாவலர் நூல்களை மலிவான விலையில் கிடைக்கச் செய்யவேண்டும். அவர் சரித்திரம் பாடசாலைகளில் பாடப்புத்தகமாகப் படிப்பிக்க ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

அவர் திருநாளைத் தேசிய விடுமுறை நாளாக அரசாங்கம் அங்கீகரிக்கப் பாடுபடல் வேண்டும்.

நாவலர்ஞாபகார்த்த முத்திரைகள் அரசாங்கம் வெளியிடச்செய்யும்படி தூண்டும் கிளர்ச்சி விரிவடையவேண்டும். வெற்றியடைய வேண்டும்.

அவர் சிலை யாழ்ப்பாணத்தில் நாட்டப்படல் வேண்டும்.

## நாவலர் விழா

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவு விழா நடைபெறும். நண்பகல் குருபூசையும், மாலை 6 மணிக்கு நினைவு விழாவும் இடம்பெறும் மாலை நிகழ்ச்சிகளுக்கு வடமாநில உதவிவித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் தலைமை வகிப்பார். பாடசாலை மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும் வித்துவான் திரு. க.கி. நடராஜன் "நாவலர் பெருமான்" என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார். இருமுறை இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## நாவலர் நினைவு பேச்சுப் போட்டி

### பரிசு பெற்ருேர் விபரம்

கொழும்பு, செவ்

கொழும்பு விவேகானந்த சபையினர் நடாத்திய நாவலர் விழாவில் நாவலர் பேச்சுப் போட்டியில் 'தமிழ் உணர்த்திய நாவலர்' என்பது பற்றிப் பேசிய இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. வி. இராஜலிங்கம் முதலாவது பரிசாகிய தங்கப்பதக்கத்தைப் பெறறுக் கொண்டார்.

இரண்டாம், மூன்ரும் பரிசுகளாகிய வெள்ளிப் பதக்கங்களை அக்குவைஞஸ் பல்கலைக்கழகக் கல்லூரியைச் சேர்ந்த, 'சைவம் காத்த நாவலர்' என்பது பற்றிப் பேசிய திரு. ஜனகன் ஸ்ரீ காந்தாவும் 'நாவலர் தந்த நற்றமிழ் எங்கே?' என்பது பற்றிப் பேசிய நாவலர் கழகத்தைச் சேர்ந்த திரு. க. இராஜபுவனேஸ்வரனும் முறையே பெற்றுக் கொண்டனர். அகில இலங்கை ரீதியில் நடந்த இப்போட்டியில் மூவரே பங்கு பற்றினரென்றும், வடக்கு கிழக்கு, மத்திய மகாணங்களிலிருந்து இதுவரைஇருந்து வந்ததைப் போல் எவரும் பங்குபற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'தெய்வமென வந்த நாவலர்'

சைவம் வளர்த்த பனிமலையோ!—உயர்
  தத்துவங் கண்ட தமிழ் மறையோ!
தெய்வமென வந்த நாவலஞர்—தமிழ்ச்
  சேவையை எவ்விதம் போற்றுவதோ!

பொய்நெறி நீக்கிய புண்ணியனை—மனப்
  புண்ணினைப் போக்கிய போதகனை;
செய் நெறி காட்டிய சேவகனைச்—சைவச்
  செம்மலினைப் புகழ்ந் தேற்றிடுவோம்!

அன்னிய ராட்சி தலையெடுக்கத்—தமிழ்
  ஆட்சி, மொழி, மதம் குன்றுவதோ!
என்ன அநீதி யெனவிழித்து—எமக்
  கேற்ற மளித்தவர் தாழ்பணிவோம்!

நன்னூல் எனப்பல பொன்னூல்புதுக்கும்—நல்லூர்
  நாவலனை மொழிக் காவலனை;
அன்னையெனத் தொழுதேற்றிப் பணிந்து—நாம்;
  அஞ்சலி செய்து அருள்பெறுவோம்!

உய்வழி காட்டிய உத்தமனை—உயர்
  உரைநடைக் கோர்தமிழ் மாமணியை;
மெய்வழி காட்டிய மேலவனை—இந்த
  மேதினி உள்ளவரை துதிப்போம்!

திமிலைக்கண்ணன்

8-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்ஞ, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மந்திரி ஹுருல்ல

## அமைதியான வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள் தேசிய அரசாங்கத்தின் போக்குவரத்து மந்திரி திரு. ஈ. பி. எல். ஹுருல்ளேயும், அவரதுபாரியாரும் நேற்றுக் காலை 5 மணிக்கு மெயில் புகையிரத மூலம் யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தை வந்தடைந்தபொழுது உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் அவர்களை வரவேற்று புகையிரதநிலைய மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

புகையிரத நிலையத்தில் பிரதம என்ஜினியர் திரு. என். ஏ. வைத்திலிங்கம், புகையிரதநிலைய அதிபர் திரு. ஜே. ஞானப்பிரகாசம் மற்றும் புகையிரதநிலைய, விமானநிலைய உத்தியோகத்தர்கள் மந்திரியை வரவேற்றனர்.

மெயில் வண்டி நேற்றுக் கலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தை வந்தடைந்தது. மந்திரியும் அவரது பாரியாரும் விசேஷ பெட்டியில் (சலூனில்) பொழுது புலரும்வரை தங்கியிருந்தனர். காலை 6 மணிக்கு உடுப்பிட்டி எம். பி அவர்களை புகையிரதநிலையத்துக்கு அழைத்துவந்தார்

புகையிரதநிலைய வெளிவாசலில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா மந்திரியையும் பாரியாரையும் வரவேற்று 'கிங்ஸ்கவுஸுக்கு' அழைத்துச்சென்றார்.

புகையிரத நிலையத்தில் மந்திரி யாழ்ப்பாணம்சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் பற்றி உடுப்பிட்டி எம் பி.யுடனும் மற்றும் உத்தியோகத்தர்களுடனும் சில மணி நேரம் கலந்துரையாடினார். அதன்பின் சாவச்சேரி வாடி வீட்டில் காலை 9 மணிக்கு மந்திரிக்கும் பாரியாருக்கும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தேநீர் விருந்தளித்தார்.

### கொடிகாமத்தில் வரவேற்பு

வடமாகாணத்தின் மூன்ருவது பிரதானபுகையிரதநிலையமும், வடமராட்சி மக்களுக்கு முக்கிய நிலையமுமான கொடிகாமம் புகையிரதநிலையத்திற்குநேற்றுகாலைதேசிய அரசாங்கத்தின் போக்குவரத்து மந்திரி திரு. ஈ.எல் பி. ஹுருள்ள முதற் தடவையாகவிஜயம்செய்தபொழுது தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஒன்ருகச் சேர்ந்து ஆடம்பரமற்ற அமைதியான வரவேற்பளித்தனர்.

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் புகையிரதநிலையஅதிபர்திரு பி. சுந்தரலிங்கம், கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ரி. சிதம்பரப்பிள்ளை மற்றும் தமிழரசு, தமிழ்காங்கிரஸ் ஆதரவாளர்கள் மந்திரியை வரவேற்று புகையிரதயிரத நிலையத்துக்கு அழைத்துச்சென்றனர்.

புகையிரதநிலையத்தின் அவசிய தேவைகளைக்கொண்ட ஒரு பட்டியலை புகையிரதநிலைய அதிபர் மந்திரியிடம் சமர்ப்பித்தார்.

உடுப்பிட்டி, பருத்தித்துறை மக்களுக்கு இது ஒரு முக்கிய புகையிரத நிலையமென்றும், தினமும்நூற்றுக் கணக்கான வடமராட்சி மக்கள் இங்கிருந்துபிரயாணஞ் செய்கிருர்களென்றும் இப்புகையிரதநிலையத்தின் முக்கிய தேவைகளைப்பூர்த்தி செய்யவேண்டியது அவசியமென்றும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் மந்திரியிடம் தெரிவித்தார்.

சச்சாய் வீதியிலுள்ள புகையிரதக் கடவையின் அவசியத்தைப் பற்றியும், மற்றும் பல தேவைகளைப் பற்றியும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மந்திரிக்கு எடுத்துக் கூறினார்.

மந்திரியுடன் வந்திருந்த இன்ஜினியர் திரு. என். பி. வைத்திலிங்கம், தற்போது போதிய நிதியில்லையென்பதை மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

புகையிரத நிலையத்திற்கு விரைவில் கூரை போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகதெரிவிக்கப்பட்டது.

புகையிரதநிலைய அதிபர் சமர்ப்பித்த பட்டியலில் நிலைய அதிபருக்கும், உதவி அதிபருக்கும் விடுதி தேவையென்றும், தற்பொழுதுள்ள பெண்கள் தங்கும் அறையை பெருப்பித்து, ஆண்களுக்கு புறம்பாக ஒருதங்கும் அறை கட்டவேண்டு மென்றும், தண்ணீர்வசதிஅவசியமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்விஷயங்கள் பற்றி கவனிபபதாக மந்திரி தெரிவித்தார்.

தங்களின் விடுதிகள் பழைய கட்டடங்களாக இருப்பதால், அதற்குள்வாழ்வது கஷ்டமாக இருப்பதாக புகையிரத நிலைய தொழிலாளி ஒருவர் மந்திரியிடம் தெரிவித்தார்.

புகையிரத நிலைய கூரையும், தண்ணிர் விஷயமும விரைவில் பூர்த்தியாகவேண்டுமென்றும் இதனுல் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் உடுப்பிட்டி எம். பி. மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

பொதுமக்களுக்கு மலசலகூடம் கட்டுவதற்கு புகையிரதப்பகுதி நிலத்தை தந்துதவுமாறு கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரம்பிள்ளை மந்திரியிடம் தெரிவித்தார். புகையிரத நிலையத்திற்கு தெற்குப்பக்கத்தில் தண்ணீர் தேங்கி நிற்பதால், பொதுமக்களுக்குப் பெரும் கஷ்டமாக இருப்பதாகவும், அப் பள்ளத்தை மூடித்தருமாறுகிராமச்சபை உபதலைவர் திரு ஆ. கனகரத்தினம் கூறியபொழுது, இன்ஜினியர் வைத்திலிங்கம் பள்ளத்தைமூடுவதுசாத்தியமில்லைமென்றும், தேங்கிநிற்குப்தண்ணீரை பாய்ச்சுவதற்கு வழிகால் ஒழுங்கு செய்துதர முடியுமென்பதையும் மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

புகையிரத நிலையத்தை மேற்குப்பக்கமாக விஸ்தரித்து கிழக்குப் பக்கத்தில் விடுதிகள் கட்டலாமென சாவகச்சேரி எம். பி. தெரிவித்தார்.

புகையிரத நிலையத்திற்கு தெற்குப்பக்கத்தில் தண்ணீர் தேங்கி நிற்கும் இடத்தையும், மலசலகூடம் கட்டுவதற்கான இடத்தையும், மந்திரி, எம். பி.க்களுடனும், கிராம சபை உறுப்பினர்களுடனும் சென்று பார்வையிட்டார்.

புகையிரத நிலையத்தைப் பார்வையிட்டபின் மந்திரி, உடுப்பிட்டி, சாவகச்சேரி எம். பி.க்களுடன் 'ரொலி' மூலம் சென்ருர், அதன்பின் மத்திரி காங்கேசன்துறை புகையிரத நிலையம், விமான நிலையம், கொக்குவில் கோண்டாவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையங்களைப்பார்வையிட்டார்.

---

யாழ். பஸ் நிலையத்தில்

## பிரயாணிக்கு "மரியாதை" மாதம்

யாழ்ப்பாணம், திங். நூற்றுக் கணக்கான மக்கள்பார்த்துக்கொண்டிருந்த சமயம். நேற்று மாலை ஒரு பிரயாணி பஸ் ஊழியர்களால் பலதடவை பலமாசத் தாக்கப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நிகழ்ந்துள்ளது.

நீர்வேலியைச்சேர்ந்த ஏ. நடராசா என்பவர் முல்லைத்தீவு பஸ்ஸில் ஏறச் சென்றபொழுது பஸ்ஸில் இடமில்லையெனக் கூறி, அதைத் தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டு பஸ் ஊழியர்கள் அவரைத் தாக்கிவிட்டு, பஸ்ஸை ஓட்டிச்சென்ருர்களென்றும், இச்சம்பவத்தை எழுத அவர் முறைப்பாட்டுப் புத்தகத்தைக் கேட்டபொழுது, புத்தகத்தைக் கொடுக்க மறுத்து பஸ் ஊழியர்கள் மீண்டும் அவரைத் தாக்கிஞர்களென்றும், இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது. இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

---

## சென். பற்றிக்ஸ் பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், திங் "புதிய நிர்வாகத்தின்கீழ் எங்களுக்கு ஒரு புதிய தெம்பு தோன்றியுள்ளது. பலவருட கஷ்டத்திற்குப் பின்னர் சமாதான அடிப்படையில் ஒரு புதிய சகாப்தமும் நல்லெண்ணமும் நம்மை எதிர்நோக்கியுள்ளது." என்று நேற்று மாலை நடைபெற்ற யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திரு. பி. ஜே. ஜீவரத்தினம் பேசும்போது கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: தேசியப்பற்றும், கண்ணியமும் திறமையுமுடைய தனியார் பாடசாலைகளுக்கு தேசிய அரசாங்கம் நீதி வழங்குமென்று நாம் பூரணமாக நம்புகிறோம். தனியார் துறை பாடசாலைகளின் கஷ்டங்கள் காரணமாக நாங்கள் பலவழிகளில் இடர்ப்பட்டுள்ளோம். ஆனல் எல்லா ஜனநாயக நாடுகளிலும் பாடசாலைகளுக்குக் கொடுக்கப் படவேண்டிய சரியான இடத்தை நாம் எதிர்பார்த்தவண்ணம்இருக்கிறோம்.

பாடசாலைப் புத்தகங்களை அரசாங்கம் பிரசுரிக்கும் கொள்கையை நோக்குகையில் எதிர்கால எழுத்தாளர்களின் சிந்தனையை விருத்தி செய்யவும், கல்வியை முன்னேற்றவும் சகல சந்தர்ப்பங்களும் கொடுக்கப்படவேண்டுமென்று கூறவிரும்புகிறோம்."

பிரதம விருந்தினராகப் போக்குவரத்து மந்திரி திரு. ஹுருல்ல் கலந்துகொண்டார். திருமதி ஹுருல்ல பரிசில்களை வழங்கினார். மாணவர்களின் நடைபெற்றன.

---

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

## கொழும்பு கலை, விஞ்ஞான பிரிவுகள் மூடப்பட்டன

பம்பலப்பிட்டி, ஞாயிறு கொழும்பு கலை, விஞ்ஞான பல்கலைக்கழகப் பிரிவுகளும் மூடப்பட்டிருக்கின்றன. மறு அறிவித்தல்வரை கொழும்பிலும் பேராதனையிலுமுள்ள பல்கலைக்கழகப் பிரிவுகள் மூடப்பட்டிருக்கும்.

நாளைமுதல் இரு ஊர்களிலுமுள்ள கட்டிடங்களில் மாணவர்கள் செல்லக்கூடாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## இலங்கையைவிட்டு வெளியேற லீலாவதிக்கு உத்தரவு

### நீதிமன்றம் வழங்கியது

பம்பலப்பிட்டி, ஞாயிறு இலங்கையை விட்டு வெளியேறுமாறு பாதுகாப்பு வெளி விவகார அமைச்சர் விடுத்த கட்டளையை ரத்துச் செய்யுமாறு கோரி திருமதி எம். ராமன் லீலாவதி தாக்கல் செய்திருந்த மனுவை பிரதம நீதியரசர் திரு. எம். சி. சன்ஸோனியும், நீதியரசர் ஸ்ரீமானேயும் தள்ளுபடி செய்துள்ளனர்.

1958-ம் ஆண்டு நவம்பர் முதல் 1959-ம் ஆண்டு ஜனவரி வரை செல்லுபடியாகக் கூடிய விசாவில் இலங்கை வந்த லீலாவதி என்ற யுவதி குடியேற்ற வெளியேற்ற அதிகாரிக்கு காலத்துக்குக் காலம் விண்ணப்பித்து 1960 வரை தங்கியிருக்க அனுமதி பெற்ருர். இதற்கிடையில் 1959 ஜனவரியில் பெல்மதுளையைச் சேர்ந்த வம்சாவழிப் பிரஜையான கே. கிருஷ்ணன் என்பவரை இந்த யுவதி திருமணம் செய்துள்ளார். 1960ல் இவர் பிரஜா உரிமைக்கு மனுச்செய்த பொழுது 1961ல் பிரஜாஉரிமைக்கு உரிய பத்திரம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சினுல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதனை நிரப்பி அனுப்பிய பின் 1964 மார்ச் மாதத்தில் பிரஜா உரிமை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லைஎனவும் மூன்று மாதத்துக்கிடையில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமெனவும், இல்லாவிட்டால் கைது செய்யப் படுவார் எனவும் பாதுகாப்பு அமைச்சரான பிரதமரிடமிருந்து பதில் கிடைத்தது.

இதனை ஆட்சேபித்து திருமதி லீலாவதி வெளி விவகார அமைச்சின் உத்தரவை ரத்துச் செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கு பிரதம நீதியரசர் எம். சி. சன்சோனி, நீதியரசர்ஸ்ரீமானே ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரின் விண்ணப்பத்தைச் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து லீலாவதி இலங்கையை விட்டு செல்லவேண்டுமென்றும் உத்தரவிட்டனர்.

---

## 'ஒத்துழைபுண்டானல் குடியேற்றப் பகுதியை வளமாக்கலாம்'

### இணைப்புக்குழுக் கூட்டத்தில் எம். பி.

கிளிநொச்சி, ஞாயிறு வவனிக்குளம் இணைப்புக் குழுக் கூட்டம் துணுக்காய் தமிழ் பாடசாலையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சிபாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம், மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. மு. பஞ்சலிங்கம் வேறு பல அரசாங்க உத்தியோகத்தர்கள் துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. சோமசுந்தரம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க, கிராம முன்னேற்றச் சங்க பிரதிநிதிகள் கூட்டத்திற்குச் சமுகம் கொடுத்திருந்தனர்.

திரு. ஜெயவீரா இணைப்புக் குழுக்கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசும்பொழுது, உங்கள் கிளிநொச்சிபாராளுமன்ற உறுப்பினர் கேட்ட தற்கிணங்க அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா இரணமடு, அக்கராயன், வவனிக்குளம் ஆகிய சிறந்த மூன்று நீர்ப்பாசன திட்டங்களுக்கும் தனித்தனி இணைப்புக் குழுக்களை அமைக்குமாறு பணித்தார். அதற்கமைய முதலாவதாக இரணமடு இணைப்புக்குழுக் கூட்டத்தையும், இரண்டாவதாக இன்றைய கூட்டத்தையும் தொடக்கியுள்ளோம் என்ருர்.

கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில்," அரசாங்க உத்தியோகத்தர்களும். மக்களின் பிரதிநிதிகளும் ஓர் இடத்தில் கூடி மக்களுடைய குறைகளையும், கஷ்டங்களையும் ஆராயவும் அவற்றை நீக்க வழிவகைகளைக் கையாளவும்இந்த இணைப்புக்குழுக் கூட்டம் வாய்ப்பளிக்கின்றது. மக்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும்ஒத்துழைத்தால் குடியேற்றப் பகுதிகளையும்விரைவில் வளமாக்க செய்யலாம்" என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பல விஷயங்கள் ஆராய்ந்து முடிவுசெய்யப்பட்டன.

கிளிநொச்சி கனகபுரத்திலிருந்து புதுமுறிப்பு கோட்டைகட்டின குளம் ஊடாகக் கல்விளானுக்கும், வெள்ளாங்குளத்திற்கும் செல்லும் வீதியை விரைவில் திருத்தி அமைக்கவேண்டும் எனவும், மாங்குளத்திலிருந்து துணுக்காய்க்குத் தனி பஸ் சேவை நடத்த வேண்டும் எனவும்' கல்விளான் குளத்தை இரண்டடி உயர்த்தும் வேலையை விரைவில் முடிக்க வேண்டுமெனவும் மல்லாவி உப-தபாற் கந்தோரை உடனே திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் முடிவுசெய்யப்பட்டது.

சகாய வேலைமூலம் குடியேற்றத்திட்டப் பகுதியிலுள்ள வீதிகளைத்திருத்துவதற்கு மக்கள் முன்வந்துள்ளதாகவும் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

---

வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'சிங்கப்பூர் கபே' இல: 406, 3 மாடியுள்ள கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. நாகமுத்து, கருங்காலி, காரை நகர். 144

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி: 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org